


# திருக்கோயில்

மார்ச் 1988 விலை ரூ. 3













திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத் திருக்குட நன்னீராட்டு விழா அண்மையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தவத்திரு ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள், தவத்திரு சுந்தரசுவாமிகள், திருமுருக கிருபானந்த வாரியார், மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு ப. சிதம்பரம், அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர் திரு கு. ஆரூடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்., ஆணையாளர் திரு தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ்., ஆகியோர் இவ்விழாவில் பங்கு கொண்டனர்.

முகப்பு: சமயக் குரவர் நால்வர்
திருஞானசம்பந்தர்,
திருநாவுக்கரசர்,
சுந்தரர்,
மாணிக்கவாசகர்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை: 30 | திருவள்ளுவர் ஆண்டு 2019 பிரபவ ஆண்டு பங்குனித் திங்கள் மார்ச்சு 1988 விலை ரூ. 3-00 | மணி: 3

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்.

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை-600 034.**

என்ற முகவரிக்கு மணியார்டர் அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| அரை ஆண்டு | — ரூ. | 18-00 |
| ஒரு ஆண்டு | — ரூ. | 36-00 |
| ஆயுள் | — ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

ஓதுவார் புத்தொளிப்பயிற்சி விழா நிகழ்ச்சித் தொகுப்பு —டாக்டர் த. அமிர்தலிங்கம்.

எமனையும் வெல்லலாம் —அருட்செல்வி

பக்த குசேலர் —வே. தியாகராஜன்

திருப்பரங்குன்றத்திலே நீ சிரித்தால் —செந்துறைமுத்து

சுடர் விளக்கேற்றிய மூவர் —சுடராளி

வள்ளலார் வாழ்க்கைக் குறிப்புகள் —பொன். செல்வராஜ்

அதிசய நெய் நந்தீஸ்வரர் —வேந்தன்பட்டி இராமநாதன்.

கந்தவேள் கருணை —திருமுருக கிருபானந்தவாரியார்.

விநாயகர் அருள் —ம. சூரியராஜ் பி.ஏ.பி.எல்.,

பாரதப் போரில் பார்த்தசாரதி —டாக்டர் த. அமிர்தலிங்கம்,

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# ஓதுவார் புத்தொளிப் பயிற்சி விழா நிகழ்ச்சிகள்



தொகுப்பு

டாக்டர் த. அமிர்தலிங்கம்

**தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளரும் இன்றைய ஆளுநரின் ஆலோசகருமான திரு ஏ. பத்மநாபன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தெய்வீகப் பேரவையில் நடைபெற்றுவந்த ஓதுவா புத்தொளிப் பயிற்சி வகுப்புகளை 19.12.87 அன்று பார்வையிட்டு ஆற்றிய சிறப்புரையின் சாராம்சம் வருமாறு:**

நான் என்னுடைய சிறிய வயதிலேயே ஆலயங்களுக்குச் செல்கிறபோது நம்முடைய ஓதுவார்கள் பாடுகின்ற திருமுறைப் பாடல்களை எல்லாம் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். எவ்வளவு சிறப்பாக உளம் ஒன்றி அவர்கள் பாடுகிறார்கள்; கேட்பவர் மனம் உருகப் பாடுகிறார்கள் என்றும் நான் அவற்றை கேட்டு வியந்திருக்கிறேன். அண்மையில் அறநிலையத்துறைச் செயலாளர் அவர்கள் என்னைப் பார்க்கவந்தபோதும் அவர்களிடத்தில் ஓதுவார்களின் வாழ்க்கை நிலை எப்படி இருக்கிறது? அவர்களுக்குத் தரக்கூடிய சம்பளம் அவர்களுடைய வாழ்க்கைக்குப் போதுமானதாக இருக்கிறதா? என்றும் நான் எனக்கு உள்ள ஆர்வம் காரணமாகக் கேட்டு அறிந்தேன்.

அதற்குப் பின்னால்தான் அறநிலையத்துறையின் சார்பில் ஓதுவார் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடப்பதை எனக்குத் தெரிவித்து என்னையும் கலந்து கொள்ளக் கேட்டீர்கள். நானும் ஆர்வமாக வந்து இந்த வகுப்புகளையும் பார்வையிட்டு இன்று உங்களிடையே பேசக்கூடிய வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன். ஓதுவார்கள் ஆகிய நீங்கள். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுகிறீர்கள். வேதங்களை ஓதுவதைப்போல தேவார திருவாசகங்களைத் தேனினும் இனிய தமிழ் மொழியில் பாடிப் பரவசமடைந்து கேட்கிறவர்களையும் பரவசமடையச் செய்கிறீர்கள். ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் உள்ளம் பண்படும் படியாகச் செய்கிறீர்கள்.

தமிழ் இசை மிகத் தொன்மையானது. அதைத் தான் கருநாடக இசை என்றும் சொல்கிறோம். கருநாடக இசை என்பது கன்னட இசை அல்ல. தென்னிந்தியாவிலே நாம் இசைக்கிற இசைதான் கருநாடக இசை. தியாகையர், சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்சிதர் ஆகிய மூவரையும் சங்கீத மும்மூர்த்திகள் என்கிறோம். இவர்களுக்கும் முன்னாலே சீர்காழி முத்துத் தாண்டவர், தில்லைவிடங்கன் மாரிமுத்தாப்பிள்ளை, சீர்காழி அருணாசலக் கவிராயர் ஆகிய ஆதி மும்மூர்த்திகளும் தமிழிசைக்குச் சிறந்த தொண்டினைப் புரிந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் மிக முற்பட்ட பழங்காலத்திலே தமிழிசைக்குத் தொண்டு புரிந்த சான்றோர்கள் தான் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர். நாளும் இன்னிசையால் தமிழையும் பக்தியையும் வளர்த்த அவர்கள் பரம்பரையிலே தான் ஓதுவார்களாகிய நீங்களும் வந்து இன்றைக்குச் சிறந்த சேவையைச் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

நம்முடைய சமயத்தின் நோக்கமே மக்களை இன்னும் சிறந்த மக்களாக மாற்றுவதுதான். "The aim of the religion is to make them better people" என்றுதான் ஆங்கிலத்திலே சமயத்தின் நோக்கத்தைச் சொல்கிறார்கள். உலகமக்கள் அனைவரும் ஒற்றுமையாக, மகிழ்ச்சியாக, சுமுகமாக வாழவேண்டும் என்றால் அதற்குச் சமய நெறி, தெய்வநெறி அவசியமாகிறது. ஆங்கிலத்திலே ஒரு பெரியவர் சொல்லியிருக்கிறார்'' "Mental Slums are more dangerous than material slums" ''தூய்மையற்ற இருப்பிடங்களை விடவும் தூய்மையற்ற மனங்கள் மிகவும் அபாயகரமானது'' என்பதுதான் இதனுடைய பொருள். ஆகவே மன அழுக்கினைத் துடைத்து, மாசில்லாத மனங்களை வளர்ப்பது தான் சமயத்தின் நோக்கம். மனித மனங்களைத் தூய்மைப்படுத்தும் ஒப்பற்ற பணியைத்தான் ஓதுவார்கள் ஆகிய நீங்கள் செய்து கொண்டு வருகிறீர்கள்.

அப்படிச் சிறப்பான தெய்வத்தொண்டினைப் புரிகிற உங்கள் வாழ்க்கை வளமாக இருக்கிறதா பொருளாதாரத்தில் மேம்பட்டதாக இருக்கிறதா என்றால் இல்லை. பல கோயில்களிலே ஓதுவார்க்கு ரூ. 100, 150 என்று குறைந்த சம்பளமே தருகிறார்கள். பெரிய கோயில்களிலே ரூ.200, ரூ.300 என்று அதைவிடக் கொஞ்சம் கூடுதலாகச் சம்பளம் தருகிறார்கள். ஆனாலும் நீங்கள் உங்களுடைய சம்பளத்தைப் பற்றிக் கவலைப்படாமல் சேவை செய்து வருகிறீர்கள். இறைவனுடைய ஆலயங்களிலே சேவை செய்வதை நீங்கள் பெரும் புண்ணியமாகக் கருதி செய்து வருகிறீர்கள். நீங்கள் பொருளைப் பெரிதாக எண்ணவில்லை. என்றாலும் உங்களுடைய வாழ்க்கையை மேம்படுத்த வேண்டிய கடமை அரசிற்கு இருக்கிறது என்பதை நாங்கள் மறக்கவில்லை.

ஏனென்றால் நம்முடைய காந்தியடிகளே ''பசியோடு இருப்பவன் முன்னே கடவுளும் வரப் பயப்படுவார்'' என்று கூறியிருக்கிறார். "Even God will be afraid to go before a starving person" ஆகவே ஆண்டவனின் சந்நிதானங்களிலே சேவை செய்யக் கூடிய ஓதுவார்கள் எல்லாம் பசியின்றி அவர்கள் குடும்பம் நல்ல நிலையில் இருக்கவேண்டும். நீங்கள் எல்லாம் உங்களுக்கு மாடமாளிகை, கூடகோபுரம் வேண்டும் என்று கேட்கவில்லை. உங்களுக்கு நியாயமான ஊதியம் ஆலயங்களிலே தரப்படவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். அதை அரசும் செய்ய ஆவனச் செய்து வருகிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



ஓதுவார் புத்தொளிப் பயிற்சி வகுப்புகளைப்பார்வையிட்டுத் தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளரும், இன்றைய ஆளுநரின் ஆலோசகருமான திரு ஏ. பத்மநாபன் ஐ.ஏ.எஸ். அவர்கள் கருத்துரை வழங்கியபோது எடுத்தபடம். அறநிலையத் துறையின் அரசுச் செயலாளர் திரு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ். அவர்கள் உடன் உள்ளார்.

கடந்த 10 நாட்களுக்கு முன்பு பாம்குரோவ் ஓட்டலில் நடைபெற்ற எழுத்தாளர்கள்-சிந்தனையாளர்கள் கூட்டத்திற்கு என்னை அழைத்திருந்தார்கள். எழுத்தாளர்கள் நிலைமையைப் பற்றிச் சொல்கிற போதும் அவர்களிலே பலபேர் வறுமையிலேதான் வாடுகிறார்கள். ஒரு கவிஞர் அங்கே சொன்னார். ''நான் எவ்வளவுக்கெவ்வளவு கஷ்டப்படுகிறேனோ அவ்வளவுக்கவ்வளவு என்படைப்புகள் நன்றாக இருக்கின்றது'' என்றார். ஆம்! கவிஞன் ஏழையாக இருக்கலாம். ஆனால் அவன் கவிதை ஏழ்மையானதாக இருக்கக்கூடாது. அங்கே மென்மை இருக்க வேண்டும்; மேன்மை இருக்க வேண்டும். அதுதான் முக்கியம். ஆகவே கவிஞர்களாக இருந்தாலும் சரி, பிற எழுத்தாளர்களாக இருந்தாலும் சரி, ஓதுவாமூர்த்திகளாக இருந்தாலும் சரி, யார் யார் இந்த நாட்டுக்காக சமுதாயத்திற்காக ஆண்டவனுக்காகத் தொண்டு செய்கிறார்களோ அவர்களை எல்லாம் நாம் கவனிக்க வேண்டும்.

ஓதுவார்களாகிய நீங்கள் எல்லாம் ஆண்டவன் சந்நிதானத்திலே பாடுகிறீர்கள்; ஆண்டவன் உங்களைக் கவனித்துக்கொள்வார் என்று நினைக்கிறீர்கள். உண்மையாக நான் என்ன விரும்புகிறேன் என்றால் ஆண்டவன் உங்களைக் கவனித்துக் கொள்ளட்டும். அரசும் இதைப்போல் உங்களைக் கவனித்துக் கொள்ளும். அந்தக் காலத்திலே கம்பரும் ஔவையாரும் கூழுக்குப் பாடியதாகச் சொல்வார்கள். இந்த விஞ்ஞான யுகத்தில் கூடவா அப்படிப்பாடவேண்டும்? ஆகவே உங்கள் வாழ்க்கையை மேம்படுத்த என்ன செய்ய வேண்டுமோ அதை நிதித்துறைச் செயலாளருடன் கலந்து செய்ய வேண்டுமென்று நானும் உங்கள் அறநிலையத் துறைச் செயலாளரிடம் கூறியிருக்கின்றேன். அவரும் இலங்கைப் பிரச்சினைகளையெல்லாம் நல்ல முறையில் தீர்வு செய்துவந்திருக்கிறார். அதே போல் உங்கள் விண்ணப்பங்களையும் நல்லபடி ஆலோசித்துத் தீர்வு செய்வார் என்று நான் நினைக்கிறேன். உங்கள் ஆணையரும் உங்கள் வேண்டுகோள்களை நிறைவேற்றுவதில் ஆர்வமாக இருக்கிறார். ஆகவே உங்கள் வாழ்க்கை மேம்பாட்டிற்காகத் தமிழக அரசு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்து இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

## ஓதுவார் புத்தொளிப் பயிற்சியின் நிறைவு விழா 9.2.88 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் அறநிலையத் துறையின் இணை ஆணையாளர் திரு இரா. தண்டபாணி, பி.எஸ்சி., பி.எல். வரவேற்புரை நிகழ்த்தினார்.

பெரியோர்களே! இங்குக் குழுமியிருக்கும் ஓதுவாமூர்த்திகளே! அறநிலையத்துறை ஆணையாளர் அவர்களே! சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு கோ. செல்வம் அவர்களே, திரு.மீ.ப. சோமசுந்தரம் அவர்களே! பேராசிரியர் திரு அ.ச. ஞானசம்பந்தம் அவர்களே! மற்றும் இங்குக் குழுமியுள்ள என் சக அதிகாரிகளே! உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை முதலில் தெரிவித்து கொள்கிறேன்.

9.12.87 அன்று தொடங்கப் பெற்ற இந்த ஓதுவார் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் சரியாக 2 மாதங்கள் நடைபெற்று இன்று 9.2.88 அதன் நிறைவு விழா இங்கு நிகழ்த்தப்படுகிறது. சென்னை மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களைச் சார்ந்த 23 ஆலயங்களிலிருந்து 23 ஓதுவாமூர்த்திகள் இந்தப் புத்தொளிப் பயிற்சியில் பங்கு கொண்டு பயன் பெற்றுள்ளனர். இந்த ஓதுவாமூர்த்திகளுக்கு ஆசிரியர்களாக திரு தருமபுரம் சுவாமிநாதன், திரு லால்குடி சுவாமிநாதன், திரு சைதை நடராஜன் ஆகியோர் இருந்து எந்தெந்தப் பதிகங்களை ஆலயங்களில் முக்கியமாகப் பாடவேண்டுமோ அவைகளை எல்லாம் பண்ணோடு பாடச் சிறந்த பயிற்சி அளித்துள்ளார்கள். பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம் அவர்களும் திருமுறைகளை மிகச் சிறந்த முறையில் ஓதுவார்களுக்குக் கற்பித்து அவற்றின் பெருமையை உணர்த்தியுள்ளார்கள். ஓதுவார்கள் இந்தத் தெய்வீகப் பேரவையில் தங்கியிருப்பதற்கும் அவர்களின் உணவு முதலான அனைத்து வசதிகளுக்கும் அருள்மிகு கபாலீசுவரர் ஆலயம், அருள்மிகு வடபழனியாண்டவர் ஆலயம்,அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயம் ஆகிய மூன்று ஆலயங்களும் செலவினை ஏற்றுக்கொண்டுள்ளன. முன்னாள் தமிழக அரசின் தலைமைச் செயலாளரும், இன்றைய ஆளுநரின் ஆலோசகருமான திரு பத்மநாபன் ஐ.ஏ.எஸ். அவர்களும் அறநிலையத்துறையின் அரசுச்செயலாளர் அவர்களும் ஓதுவார்கள் புத்தொளிப் பயிற்சியில் மிகுந்த ஆர்வம் காட்டி நம்மை ஊக்கப் படுத்தினார்கள். இதேபோல் பிற மாவட்டங்களிலும் ஆங்காங்குள்ள ஓதுவாமூர்த்திகளுக்கு புத்தொளிப் பயிற்சிகள் அளிக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்து இன்றைய நிறைவு விழாவில் கலந்து கொள்ள வருகை புரிந்திருக்கும் அனைத்துச் சான்றோர்களையும் வருக வருகவென வரவேற்கின்றேன்.

## சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு கோ. செல்வம், அவர்கள் தம்முடைய தலைமை உரையில் தெரிவித்த சில கருத்துகள்:

திருநாவுக்கரசர் ''தமிழோடு இசை பாடல் மறந்தறியேன், நலம் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்'' என்று பாடியிருப்பது நாம் அறிவோம். ஆகவே திருமுறைகளைத் தினம் தினமும் இறைவனுடைய ஆலயங்களில் பாடிப்பரவசம் கொள்கின்ற ஓதுவாமூர்த்திகளுக்கு மறதி இருக்கமுடியாது. இருக்கவும் கூடாது. அதை வறபுறுத்தத்தான் இந்தப் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நிகழ்த்தப்படுவதாக நான் எண்ணுகிறேன்.

ஓதுவாமூர்த்திகள் என்று உங்களை இறைவனோடு ஒப்பிட்டுச் சான்றோர்கள் அழைத்துப் பெருமைப் படுத்துவதிலிருந்தே உங்கள் சிறப்பை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம். இறைவன் ஆலயத்திலே இறைவனுடைய கருவறையிலே இருந்து தொண்டு புரிகின்ற காரணத்தினாலேயே நீங்கள் ஓதுவாமூர்த்திகள் ஆகின்றீர்கள். பக்தர்களை இசையினால் தன்வயப்படுத்தி இறைவனோடு ஆற்றுப்படுத்துகின்றவர்கள் நீங்கள்.

உலகத்திலே நான்காயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளார்கள். ஆனால் இசை என்பது உலகமக்கள் அனைவரையும் ஈர்க்கும் தனிமொழியாகத் திகழ்வதற்குக் காரணம் அது ஆன்மாவிலிருந்து தோன்றுகிற மொழி. ஆன்மாவிலிருந்து ஆண்டவனுக்காகப் பேசப்படுகின்ற, பாடப்படுகின்ற, பயிலப்படுகின்ற ஒரு மொழிதான் இசை. அத்தகைய் மொழிக்கு உரிமை படைத்தவர்களான நீங்கள் தான் உலகிலேயே சிறந்தவர்கள். இசைக்கு இரண்டு ஆற்றல்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இசை எல்லாரையும் இசையவைக்கும். இசை எல்லாரையும் இயக்க வைக்கும். அத்தகைய பெருமை கொண்ட இசையினால் நீங்கள் பக்தர்களின் மனங்களை இசைய வைத்து ஆண்டவனோடு இணையவும் வைக்கின்ற ஒப்பற்ற தொண்டினைப் புரிகிறீர்கள்.

அமெரிக்காவிலே மிகச் சிறந்த டாக்டர் ஒருவர் தம்முடைய அறையிலே இசையின் பெருமையை அறிவிக்கும் வாசகம் ஒன்றை எழுதிவைத்திருக்கிறார். ''நீங்கள் என்னிடம் வராமல் இருக்க வேண்டுமானால், இசையை நாடுங்கள்'' என்பது தான் அவருடைய அறிவுரை. ''இசைக்கூடத்திற்குச் செல்லுங்கள். சிறந்த இசையினைக் கேளுங்கள். இசையினைப் பயிலுங்கள். அதனால் உடலிலும், உள்ளத்திலும் நோய்வராமல் வாழலாம்'' என்று அவர் எழுதிவைத்திருக்கிறார். ஆகவே இசை வெறும் பொழுதுபோக்குச் சாதனம் அல்ல; இறைவனே இசையாகவும் இசையின் பயனாகவும் திகழ்வதைச சுந்தரர்

''ஏழிசையாய் இசைப் பயனாய் இன்னமுதாய்''

என்ற தேவாரப் பாடலில் சுட்டியிருக்கிறார். சிறந்த இசைப் பாடலினால்தான் சுந்தரர் முதலை யுண்ட பாலகனை உயிர்ப்பித்தார்; மங்கை பாகனைப் பரவையிடம் தூது போக்கினார்; வேண்டிய போதெல்லாம் பொன்னையும் பொருளையும் இறைவனிடம் கேட்டுப் பெற்றார்; வெள்ளை யானையின் மேலேறிக் கயிலாயமும் சென்றார்.

அத்தகைய இசைக்கு உரிமை படைத்தவர்களாக - கருங்கல் மனங்களையும் இறைவனிடம் உருகி ஒன்ற வைக்கும் அரிய தொண்டு புரியும் ஓதுவாமூர்த்திகளாக நீங்கள் திகழ்கிறீகள். இன்றைக்கு உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற புத்தொளிப் பயிற்சிக்கு நிறைவுவிழா நடத்தப்படுகிறது என்றாலும் உங்கள் பயிற்சிக்கு நிறைவே கிடையாது; அது வளர்ந்து செல்லும். மென்மேலும் உங்கள் வாழ்வில் புத்தொளிப் பாய்ச்சி இந்த வையத்திலும் புத்தொளிப் பரப்பும் என்று கூறி வாழ்த்துகிறேன்.

## பேராசிரியர் திரு அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள் தம்முடைய வாழ்த்துரையில் தெரிவித்த சில கருத்துகள் வருமாறு:

இந்த உலகத்திலே எல்லா உறவுகளிலும் பொறாமை உண்டு. அண்ணன் தம்பி என்றால் பொறாமை; மகன் தன்னைக் காட்டிலும் சிறந்து விளங்கினால் அதனால் தந்தைக்கு மகன் பேரிலும் பொறாமை ஏற்படுவது உண்டு. பொறாமைக்கு இடம் கொடுக்காத ஒருவர் யார் என்றால் அவர் தான் ஆசிரியர். தன் மாணவன் எவ்வளவு பெரிய பட்டங்கள் பதவிகள் பெற்றாலும் பொறாமை கொள்ளாமல் மகிழ்ச்சி அடைகிற ஒரே ஆன்மா ஆசிரியர்தான். அந்த வகையில் என் மாணவர், இன்றைய சென்னை வானொலி நிலைய இயக்குநர் கோ. செல்வம் சிறந்த சிந்தனையாளராக விளங்கு

# வினாவும் விடையும்



**சீடன் :** சுவாமி! மகா சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, கந்தர் சஷ்டி முதலான புண்ணிய காலங்களில் உபவாசம் இருக்க வேண்டும் என்று கூறப்படுகிறதே! அத்தகைய உபவாசம் இருப்பதால் நம்முடைய மனம் இறுகி பிறருடைய துன்பம் கண்டு இரங்கும் தன்மையும் போய்விடும் என்று சொல்லப்படுகிறதே! அது உண்மையா சுவாமி?

**குரு:** சீடனே! தகுந்த கேள்வியே கேட்டாய். உபவாசத்தால் நம்மனம் இறுகும் என்பது தவறு. நம்மிடமுள்ள இரக்ககுணம் மேலும் சிறக்கும் என்பதே உண்மை. நாம் உண்ணாமல் பட்டினி இருக்கும்போது நமக்குப் பட்டினியின் துயரம் நன்கு விளங்கி, இதுபோல்தானே ஏழைகள் பசியால் வருந்துவார்கள் என்ற எண்ணம் உண்டாகி இல்லாதவர்க்கு இரங்கும் இரக்க குணத்தை உலோபிகளும் பெற முடியும். ஆகவே உபவாசம் கருணையை வளர்க்கும் சிறந்த சாதனம். பணக்காரர்கள் பசி என்பதை என்னவென்றே அறிய மாட்டார்கள். அவர்களும் உபவாசம் இருப்பதால் பசியின் சொடுமையை உணர்ந்து வறியவர்க்குக் கொடுத்து உண்ண வேண்டும் என்ற நல்ல எண்ணத்தைப் பெறுவார்கள். மகாபாரதத்திலும் உபவாசத்தின் பெருமை கூறப்பட்டிருப்பதனால் முக்கிய புண்ணிய நாட்களில் உபவாசம் இருந்து இறைவனை வழிபட வேண்டுவது பக்தர்களின் மிகச் சிறந்த பக்தி ஒழுக்கங்களில் ஒன்றாகும்.

---

வது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இசை தன் இருபெரும் ஆற்றல்களால் நம்மை இசைய வைக்கும், இயக்குவிக்கும் என்று அவர் சொன்ன அந்தக் கருத்தும் மிகச் சிறப்பானது.

தன்னையே எண்ணி நாளும் மனம் உருகி நின்று பாடும் அடியவருக்கு ஆண்டவன் என்ன செய்தார்? 'மண் இன்றி விண் கொடுத்தான்' என்பார் திருஞான சம்பந்தர். மண்ணில் பெறக்கூடிய சுகங்களைத் தராமல் விண்ணில் பெறக்கூடிய சுகங்களை ஆண்டவன் அருள்வான் என்று நாம் தவறாகப் பொருள் கொள்ளக்கூடாது. இன்றி என்ற அந்த வினை எச்சத்திற்கு இல்லாமை என்று பொருள் கொள்ளக் கூடாது. இதோடும்கூட என்று பொருள் கொள்ள வேண்டும். மண்ணிலும் நல்ல வண்ணம் வாழலாம். இதோடு இல்லாமல் தன்னை ஓதும் இந்த அடியார்கள் விண்ணிலும் நல்ல வண்ணம் வாழலாம் என்பது பொருள். எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை என்று அடித்துப் பேசுகிறார் திருஞான சம்பந்தர். சுந்தரமூர்த்தி நாயனாரும் திருமுறைகளை ஓதுவதனால் வாழ்க்கையிலே சுகம் கிடைக்குமோ கிடைக்காதோ என்று ஐயுறுபவர்களுக்காகத்தான்

''இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே''

என்று அடித்துக் கூறுகிறார் அருணகிரிநாதர்

''மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்போன்''

என்று சொல்லுகிறார். தந்தை திட்டினால் பிள்ளை கோபிக்கப் போவதில்லை. அதே போல் பக்தன் திட்டினால் ஆண்டவன் கோபிக்கப் போவதில்லை. இந்தஅளவு பக்திக்குச் சிறப்பு கொடுத்த சமயம் வேறெங்கும் கிடையாது.

இதுவரை உங்களோடு ஒரு பத்து வகுப்புகள் வந்து கலந்து பேசி நான் என்னுடைய 73வது வயதிலும் பல புத்தகங்களைப் புரட்டிப்பார்த்து உங்களுக்குப் போதிக்கும் வாய்ப்பினை உண்மையிலேயே எனக்கு இறை திருவருள் கொடுத்தது என்று எண்ணுகிறேன். என் நன்றியினையும் வாழ்த்துக்களையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இசைப் பேரறிஞர்**
**திரு மீ. ப. சோமசுந்தரம்,**
**அவர்கள் தம்முடைய வாழ்த்துரையில் தெரிவித்த சில கருத்துகள் வருமாறு :**

நம்முடைய சங்கீதத்திற்கும் மேல்நாட்டுச் சங்கீதத்திற்கும் அடிப்படையிலேயே வித்தியாசம் இருக்கிறது. முக்கியமாகத் தென்னாட்டுச் சங்கீதத்தின் மிகச் சிறப்பான ஒரு பண்பு அது மொழியினை விட்டுப் பிரிவதே இல்லை. நம்முடைய கடவுளான சிவபெருமான் எப்படி உமையைவிட்டு பிரியாமல் உமையொரு பாகனாகத் திகழ்கிறாரோ, அதேபோல நம்முடைய தமிழிசையும் மொழியை விட்டுப் பிரிவதே இல்லை. மொழி இல்லாத இசையை உடம்பு இல்லாத ஆவி என்று தான் கூறவேண்டும். அவ்வாறு இல்லாமல் மொழியும் இசையும் இரண்டறக் கலந்து இருப்பதே நம் தமிழிசைக்குரிய பெருமையாகும்.

இசையிலே சிறந்து விளங்குபவர்களுக்கு அவர்களுடைய உடலைச் சுற்றிய ஒரு ஒளி உடலும் இருப்பதைச் சித்தர்கள் தங்கள் பாடல்களிலே குறிப்பிட்டு உள்ளார்கள். இதைத் தான் தேஜஸ் என்றும் கூறுவது வழக்கம். நம் ஊனுக்குள் சங்

கீதம் இரண்டறக் கலந்து விடும்போது அந்த உடலுக்குத் தேஜஸ் உண்டாகி ஒளி வட்டம் உண்டாகிறது. ஆகவேதான் அப்பர் சுவாமிகள், திருஞான சம்பந்தர் போன்ற தெய்வீகப் புருஷர்களுக்கு ஒளிவட்டம் முகத்தைச் சுற்றி இருப்பதைக் காண்கிறோம்.

ஓதுவா மூர்த்திகளாகிய நீங்கள் திருமுறைகளை ஆலயங்களில் ஓதுவதை நான் யாகம் என்றே குறிப்பிடுவேன். இசைப் பாக்களிலேயே சிறந்த பாக்கள் தேவாரம்தான். திருமூலரும் பாடலை ''யாகம்'' என்ற பொருளில் ''பாட்டவி'' என்று சொல்வார்.

ஆகவே இறைவனுக்கு முன்னால் ஓதுவார்களாகிய நீங்கள், நாளும் தேவாரத்தைப்பாடி யாகம் செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் யாகமே இந்த உலகத்தை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய தேவாரங்களுக்குள்ள இன்னொரு சிறப்பு அவை இயற்றப்பட்ட பாடல்கள் அல்ல. இறைவனால் அருளப்பட்ட பாடல்கள். உங்களுக்கு இரசிகன் யார் என்றால் பரமசிவனே உங்கள் பரமரசிகன். நீங்கள் பாடும். தேவாரம் தான் சிறந்த மந்திரம். தேவார மந்திரங்களை முறையாகப் பாடுவதனால் பலப்பலகாரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம். நோய்களைக் குணப்படுத்தலாம். இதனால் நீங்கள் ஆனந்த மயமாக இருக்கிறீர்கள். கேட்பவர்களையும் ஆனந்தமாக்குகிறீர்கள். இதைவிட என்ன பயன் இருக்க முடியும் சங்கீதத்திறகு?

உங்களுடைய நல்ல காலம் இப்பொழுதுள்ள அதிகாரிகள் எல்லாம் உங்களுடைய பெருமையை உணர்ந்தவர்களாக இருக்கிறார்கள். உங்களுடைய அறநிலையத்துறையின் ஆணையாளர் வந்து உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார். சொற்சான்றைவிட பொருட் சான்றிற்குப் பயன் அதிகம்; பொருட்சான்றாக ஆணையாளர்வந்து உட்கார்ந்து கொண்டுள்ளார். அதே போல்தான் உங்களது துணைச் செயலாளர் திரு கோபாலனும். உங்களுடைய செயலாளர் திரு ஆளுடைய பிள்ளையும் தமிழார்வம் மிக்கவர். மறைமலை அடிகளின் மகள்வயிற்றுப் பேரன். இப்படி எல்லாமே சுருதி சேர்ந்துள்ளது. நானும் உங்களுடைய பரம்பரையைச் சேர்ந்தவன். நான் கூறுவதுதான் உண்மையான வாழ்த்துரை. நீங்கள் அனைவரும் சௌகரியமாக இருக்கவேண்டும். நீங்கள் வாழ்க! வளர்க!

## அறநிலையத் துறையின் துணைச் செயலாளர் திரு

## எம். கோபாலன், எம் ஏ.

## அவர்கள் ஆற்றிய சிறப்புரைச் சுருக்கம் வருமாறு

இன்று பிறந்ததன் பேறு பெற்றேன் என்று சொல்வார்கள். உண்மையிலேயே அதைவிடப் பெரும்பேறு அடைந்து நான் உங்கள் முன்னால் நிற்கிறேன். நான் பேராசிரியப் பெருந்தகை அ.ச. ஞானசம்பந்தம் அவர்களிடம் பச்சையப்பன் கல்லூரியின் மாணாக்கனாக இருந்து பயிலும் பேறு பெற்றவன். அவர் பின்னால் தலைமைச் செயலகத்திலே, பணியாற்றிய காலத்திலும் அவரிடம் கம்ப இராமாயணமும் பெரியபுராணமும் பாடம் கேட்கும் பேறு பெற்றவன். எனக்கு அப்பொழுதெல்லாம் கவிதை எழுதுவதில் ஆர்வம் உண்டு ''கண்ணுதல் பத்து'' என்று சில கவிதைகளை எழுதினேன். அதில் இருபாடல்களை இங்கே குறிப்பிடுவது நலம் என்று நினைக்கிறேன்.

தொண்டர்க்குத் தொண்ட னாவான்
    தோழமைக் குரிய தேவன்
துண்டவெண் ணிலவ ணிந்த
    தூயவன் எங்கள் ஈசன்
விண்டவர் புரமெ ரித்த
    வேதியன் கோதி லாதான்
கண்ணுதல் அன்றி மற்றார்
    கழறுதே வனைத்தும் பொய்யே.

பண்ணுறு நாத மாவான்
    பற்றுளார் பாவம் தீர்ப்பான்
நண்ணுதற் கரிய தான
    நஞ்சினை யுண்ட கண்டன்
எண்ணுதற் கரிய தான
    எழில்மிடைந் தொளிரு மேனி
கண்ணுதல் அன்றி மற்றார்
    கழறுதே வனைத்தும் பொய்யே.

இக்கவிதைகளைப் பேராசிரியர் அவர்கள் கண்ணுற்று எனக்குச் சில அறிவுரைகளை வழங்கினார்கள், ''காலத்தைவென்று நிற்பதுதான் கவிதை, நமக்கு மூவர்பாடிய தேவாரம் உள்ளிட்ட கவிதைச் செல்வங்கள் ஏராளமாய் உள்ளன. அவற்றைக் கற்றாலே போதும். புதிதாகக் கவிதைகளைப் பாடவேண்டுவதில்லை'' என்ற அவருடைய அறிவுரைக்குப்பிறகுதான் நான் கவிதை எழுதுவதை நிறுத்திகொண்டேன். திருமுறைகளைப் பயில்வதில் உவப்பு கொண்டேன். திருமுறைப் பாடல்கள் என்றால் ஈசனுக்கே அதில் விருப்பம் அதிகம்.

''மற்றுநீ வன்மை பேசி வன்தொண்டன்
    என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பின் பெருகிய
    சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால் மண்
    மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறைபாடும்
    வாயார்''

என்று திருமுறைப் பாட்டினைப் பாடுமாறு சுந்தரரை இறைவரே வேண்டிக் கொள்வதை நாம் பெரிய புராணத்திலே பார்க்கிறோம். அத்தகைய இறைவருக்கு உவப்பான பாடல்களை ஓதுவதனால் தான் ஓதுவாமூர்த்திகள் என்று நீங்களும் இறைவருக்கு ஒப்பவைத்துச் சிறப்பிக்கப் படுகின்றீர்கள். நீங்கள் திருமுறைகளை ஓதும் போது அதன் பொருளுணர்ந்து ஓதுதல் வேண்டும். திருநாவுக்கரசர் தேவாரத்தில் ஒருதொடரை ''சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்'' என்று எல்லோரும் இப்பொழுது பாடி வருகிறார்கள். அத்தொடர்:''சலம் பூவொடு தூவ மறந்தறியேன் '' என்றிருக்க வேண்டும் என்பது என்கருத்து. தொண்டை மண்டல ஆதீனம் சுவாமிகளும் இதைப் பற்றி ஆராய்ச்சி செய்து கட்டுரை வெளியிட்டிருக்கிறார். திருமுறைகளில் எந்த இடத்திலேயேயும் நைவேத்தியம் பற்றிய குறிப்பே இல்லை. சுவாமி எனக்கு அதைப் படைக்க வேண்டும் இதைப் படைக்க வேண்டும் என்று கேட்பதில்லை. பூவுடன் நீரைத் தூவுதலே பூசை ஆகும். ஆகவே தான் ''சலம் பூவொடு தூவ மறந்தறியேன்'' என்பதே பாடமாக இருக்க வேண்டும் என்ற என் கருத்தை ஆய்ந்து பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திருநாவுக்கரசர் பாடிய இன்னொரு பாடலில்

''மாதனத்தை மாதேவனை மாறிலாக்
கோதனத்தில் ஐந்தாடியை''

என வருகிறது. இதற்கு கோமியம், கோசாணம், பால், நெய், வெண்ணெய் என்ற ஐந்து என்று சிலர் பொருள் கொள்கிறார்கள். கோமியமும், கோசாணமும் பாலை விட மாறுபட்டது. ஆனால் அப்பரோ ''மாறிலாக் கோதனத்தில்'' என்று பாடியிருப்பதால் கோசாணத்தையும், கோமியத்தையும் அப்பர் சுவாமிகள் சுட்டியிருக்கமாட்டார் என்பது என் கருத்து. ஆகவே சொல்நுட்பம் உணர்ந்து பொருள் நுட்பம் தெரிந்து ஓதுவா மூர்த்திகள் திருமுறைகளை ஓதல் மிக அவசியமாக இருப்பதனாலேயே இத்தகைய புத்தொளிப் பயிற்சி வகுப்புகளை இப்பொழுது தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிறோம். இப்பயிற்சி வகுப்புகளில் அனைத்து ஓதுவார்களும் பங்குகொண்டு பயன் அடையுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## இணை ஆணையாளர் திரு
## ம. சூரியராஜ், பி.ஏ.,பி.எல்.
## தம்முடைய வாழ்த்துரையில் தெரிவித்த சில கருத்துகள்

எனக்கு முன்னால் மிகச் சிறந்த பேராசிரியர்கள் எல்லாம் தங்கள் கருத்துகளை வழங்கி அமர்ந்துள்ளார்கள். அவர்களுக்குப் பிறகு நான் என்னுடைய கருத்துகளை வழங்குவது மிகவும் சங்கடமாக இருக்கிறது. என்றாலும் குற்றம் களைந்து நல்லதை மட்டும் ஏற்றுக் கொள்வீர்கள் என்ற துணிவில் சில கருத்துகளைச் சொல்ல விழைகிறேன்.

வானொலி நிலைய இயக்குநர் கோ.செல்வம் அவர்கள் பேசும்போது இசையின் ஒலி எப்படி எல்லாம் தன் பணியைச் செய்கிறது என்பதைத் தெரிவித்தார்கள். பேராசிரியர் மீ.ப.சோமசுந்தரம் அவர்கள் பேசும்போது நம்முடைய உடலைச் சுற்றியுள்ள ஒளி உடலின் சிறப்பினைத் தெரிவித்தார்கள். விஞ்ஞானத்தோடு ஆன்மீகம் கொண்டுள்ள தொடர்பினை இவர்கள் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார்கள். ஒருவருடைய சிந்தனை அவரோடு ஒத்த சிந்தனையுடைய மற்றவரையும் கவர்ந்து இழுக்கிறது என்பதை ஒரு விஞ்ஞானக் கருத்தாகத் தெரிவிக்கிறார்கள். நாம் ஒன்றைப் பேச நினைத்து அதையே நம்மைப் பார்க்க வந்தவரும் நம்மிடத்திலே பேச ஆரம்பிக்கும்போது இத்தகைய கருத்தொற்றுமையை நாம் உணர்கிறோம். நாம் சிந்திக்கிற சிந்தனை நல்லதானால் நல்ல பாதிப்பையும், தீயதானால் தீயபாதிப்பையும் உண்டாக்குகிறது. ஆகவே நல்ல சிந்தனைகளை நாம் நினைக்கும்போது, நல்ல பாடல்களை அவற்றைப் பாடுகிறபோது, அந்த ஒலியலைகள் மற்ற இடங்களுக்கும் பரவி, அவை நாட்டிற்கு நல்லதை உண்டாக்குகின்றன. மழைவேண்டும் என்ற சிந்தனையோடு ஓதுவார்கள் ஒன்று கூடிப் பாடும்போது, அந்தச் சிந்தனை அலைகள் மழையைப் பெய்விக்கின்றன. நமக்கு வேண்டிய ஒருவர் உடல்நலம் பெற வேண்டும் என்று நாம் ஒன்று கூடிப் பிரார்த்திக்கும்போது, அந்தப் பிரார்த்தனைகளுக்கும் பயன்கிட்டுகிறது.

---

### ஆசை என்ற சங்கிலி

ஆசை என்ற சங்கிலி எத்தனை நீளம் உள்ளதோ, அத்தனை நீளத்திற்கு அப்பால் கடவுள் நிற்கிறார். அச்சங்கிலி எத்தனைக்கு எத்தனை குறைகின்றதோ அத்தனைக்கு அத்தனை கடவுள் நம்பால் நெருங்கி வருகின்றார். ஆசைகளே இல்லையானால் நாம் இறைவனோடு ஐக்கியமாகி விடலாம்.

---

ஆகவேதான் ஆலயங்களில் ஞாலம் வாழ வேண்டும் என்ற நல்ல சிந்தனையோடு ஓதுவா மூர்த்திகள் பாடிவருகிறார்கள். அவர்களுடைய தொண்டினை நாமும் போற்றுகிறோம். இன்றைய தினம் நான் ஓதுவாமூர்த்திகளிடம் என்னுடைய விண்ணப்பம் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். நீங்கள் திருமுறைகளை ஆலயங்களில் படிக்கும் பொழுது உங்கள் சிந்தனை தடைபட்டு விடாதபடி கண்ணை மூடிக்கொண்டு ஓதுங்கள் என்பதே என்னுடைய விண்ணப்பம் ஆகும். காரணம் நீங்கள் பாடும்போது அங்கே பணியாற்றும் அர்ச்சகர் தேங்காய் உடைக்கக் கூடும். அல்லது வேறு ஏதேனும் உங்கள் சிந்தனையைத் தடைப்படுத்தக் கூடிய செயல் அங்கே நடைபெறவும் கூடும். சிறந்த பாடகர்கள் உச்ச ஸ்தாயிக்குப் போகும்போது கண்ணை மூடிக் கொண்டுதான் பாடுகிறார்கள். அதைப் போல் நீங்களும் உங்கள் சிந்தனையை வயப்படுத்த வேண்டுமென்றால் அதற்குக் கண்ணை மூடிக் கொண்டு பாடுவதும் ஒருவழியாக அமையும். இறையுணர்வோடு இரண்டறக் கலந்து நீங்கள் மனம் உருகிப் பாடும்போது உண்டாகக் கூடிய பலன் நாட்டிற்கு மிகுந்த நன்மையாக அமையும் என்பதனாலேயே என்னுடைய இந்த விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆணையாளர் திரு
## தி. இராச. கல்யாணசுந்தரம் ஐ ஏ எஸ்.
## அவர்கள் புத்தொளிப் பயிற்சியில் கலந்துகொண்டு பயிற்சி பெற்ற ஓதுவார்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துரை வழங்கியபோது கூறிய சில முக்கிய கருத்துகள் வருமாறு :

ஒருமுறை தேவாரம் இளமையில் பயின்றவர்கள் அதை வாழ்நாள் முழுவதும் மறக்கவே இயலாது. இறுதிக் காலத்திலும் அதனுடைய பயன்களை அவர்கள் அனுபவிப்பார்கள். மற்றவர்களும் அந்தப் பலன்களை அனுபவிக்க அவர்கள் காரணமாகவும் காரியமாகவும் இருப்பார்கள். நம்முடைய இணை ஆணையர் சூரியராஜ் அவர்கள் சுட்டிக்காட்டியபடி ஓதுவாமூர்த்திகள் தேவாரத்தை நிறைவாக ஆலயங்களில் ஓதமுடியாமல் அவர்களுக்குச் சில இடையூறுகள் ஏற்படுவது உண்மைதான். தேவாரத்தை அவசர அவசரமாக அரைகுறையாகப்பாடி முடிப்பதால் பலன் இல்லை. ஆகவே முறையாக ஓதுவாமூர்த்திகள் ஆலயங்களில் தேவாரங்களை ஓத அவர்களுக்கு நாம் வாய்ப்பளிக்க வேண்டியது அவசியமாகும்.

## நவகிரகங்களை எப்பொழுது வழிபடவேண்டும்?

நவகிரகங்கள் தெய்வங்களால் நியமிக்கப் பட்ட பணியாளர்கள், ஆகவே தெய்வங்களை முதலில் வணங்கி இறுதியில்தான் நவகிரகங்களை வழிபட வேண்டும். தெய்வங்களையே வணங் காமல் நவகிரகங்களை வணங்குவதோ அல்லது தெய்வங்களை வழிபடு முன் நவகிரகங்களை வழி படுவதோ கூடாது என ஆன்றோர்கள் அறிவுறுத்து கின்றனர்.

---

சமீபத்தில் நான் ஒரு கோயிலுக்குப் போயிருந் தபோது அங்கே இருந்த சிவாச்சாரியார் ஓதுவா ரிடம் ''ஒரு சிறிய பாடலாக பாடி சீக்கிரமாக முடி'' என்று சொன்னார். நான் உடனே ''பன் னிரு திருமுறைப்பாடல்களையும் அவசரமின்றி முறையாகப் பாடுங்கள்'' என்று கேட்டுக் கொள்ள அப்படியே ஓதுவாரும் பாடினார். நான் ஆணைய ராக அதிகாரத்தில் இப்பொழுது இருக்கிற கார ணத்தால் இதை என்னால் செய்ய முடிந்தது. நானும் பொறுப்பில் இல்லாத ஒரு சாதாரண சேவார்த்தியாகச் சென்றிருந்தால் இதை என்னால் சொல்லியிருக்க முடியுமா? சொன்னாலும் அதை அங்கே ஏற்றுக் கொண்டிருந்திருப்பார்களா என்று என்னால் சொல்லமுடியாது. கடவுள் சேவையைக் கூட துரிதப் படுத்தக்கூடிய சூழ்நிலை இப்பொழுது இந்தக் காலத்தில் நேரிடுகிறது. ஆனால் நாம் தான் அதை மாற்றியாக வேண்டும்.

ஓதுவாமூர்த்திகளுடைய புனிதப் பணி கவ னிக்கப்படாமலே கொஞ்சம் கொஞ்சமாக மறைக் கப்பட்டு சுருங்கிக் கொண்டு வந்தது. அதை விரிவு படுத்தி அவர்களுடைய தகுதியை இந்த உலகிற்கு எடுத்து உணர்த்த வேண்டும் என்பதனால்தான் இன்றைக்கு அறநிலையத்துறை இத்தகைய புத் தொளிப் பயிற்சிகளை நடத்திவருகிறது. திரு முறைகள் மேல் நம்முடைய மக்களுக்கெல்லாம் ஆர்வம் உண்டாகக் கூடிய அளவில், அன்றைக்கு திருஞான சம்பந்தர் சீர்காழியில் ஞானப்பால் உண்டு பாடினாரே அதைப் போல நமக்கும் ஞானப் பால் கிடைக்காதா என்று ஏங்கக்கூடிய அளவிற்குப் பல பயிற்சி வகுப்புக்களை நாம் தொடங்குவோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநரின் ஆலோசகராக தற்போது பொறுப் பேற்றுக் கொண்டிருக்கும் தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் திரு பத்மநாபன், ஐ.ஏ.எஸ். அவர்கள் ஓதுவார்கள் மேல் அளவு கடந்த ஆர்வம் கொண்டு விளங்குகிறார். அவருக்குத் தமிழில் ஆர்வம் அதிகம். அதிலும் ஆன்மீகம்-இந்து சம யத்தைப் பொறுத்தவரையில் அவர் மிகுந்த ஆர் வம் கொண்டு விளங்குகிறார். அவர் பல ஆராய்ச் சிக் கட்டுரைகளை எழுதி டாக்டர் பட்டமும் பெற்றிருக்கிறார். அவருக்கு உள்ள எத்தனையோ பணிகளில் இந்த ஓதுவார் புத்தொளிப் பயிற்சி வகுப்புகளையும் வந்து பார்வையிட்டு ஒரு மணி நேரம் இங்கிருந்து ஓதுவார்களுடன் உரையாடி கலந்து பேசி, ஓதுவார்களுக்கு அரசால் இயன்றதை எல்லாம் செய்வதாகக் கூறியிருக்கிறார் என்றால் இது ஓதுவார்களுக்கெல்லாம் நல்ல காலம் என்று தான் குறிப்பிடவேண்டும். அதே போல் முன்னாள் அறநிலையத்துறையின் ஆணையாளர்-மறைமலை யடிகளாரின் பேரனார்-அவர் இந்தத் துறையின் தலைவராகச்செயலாளராக இருப்பது நமக்கு எல் லாம் ஒரு பெரிய பேறு. எரிகிற தீபச் சுடரை தூண்டிவிட்டால் அது இன்னும் நன்றாகப் பிர காசிக்கும். அதைப்போல ஓதுவார்களுடைய வாழ்க்கையும் பிரகாசிக்க வேண்டும் என்பதற்காக ஆளுநரின் ஆலோசகரும், அறநிலையத்துறையின் செயலாளரும் இத்தகைய பயிற்சி வகுப்புகளை நடத்த நமக்கு ஆர்வத்தை ஊட்டியிருக்கிறார்கள்.

இங்கே 60 நாட்கள் நடைபெற்ற பயிற்சி வகுப்புகளில் திருமுறைகள் அனைத்தையும் கற் பிப்பது அல்லது கற்றுக் கொள்வது என்பது இய லாத காரியம். ஆகவே சுருக்கமாக-அதே நேரத் தில் மிக அவசியமான அனைத்தையும் கற்பித்திருக் கிறார்கள். பயிற்சிஅளித்த ஆசிரியர்களைப் பற்றிச் சொல்வதற்கு எனக்குத் தகுதியில்லை. தருமபுரம் சுவாமிநாதன், லால்குடி சுவாமிநாதன், சைதை நடராாசன் ஆகிய இம் மூவரும் தலைசிறந்தவர்கள். இவர்களோடு பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம் இசைப்பேரறிஞர் திரு மீ.ப. சோமசுந்தரம் அவர்களும் இவர்களுக்கு வேண்டிய கருத்துகளை பல வகுப்புகள் நடத்தித் தெளிவு படுத்தியிருக்கி றார்கள். எந்த பண்ணில் எந்தப் பதிகத்தைப் பாடவேண்டும் என்பதை எல்லாம் அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். காரணம் லைட் மியூசிக் எப்படி வேண்டுமென்றாலும் பாடலாம். ஆனால் தேவாரத் திருமுறைகளை அவ்வாறு பாட முடியாது. ''தோடுடைய செவியன்'' என்றால் அதை நட்டபாடைப் பண்ணில் தான் பாடவேண் டும். ''பித்தா பிறைசூடி'' என்றால் அதை அதற் குரிய இந்தளப் பண்ணில்தான் பாடவேண்டும். வேறு பண்ணில் பாடினால் அது அபஸ்வரமாகத் தான் இருக்கும்.

ஓதுவாமூர்த்திகளுக்கு ஒரு தனித் தகுதி இருக் கிறது. இறைவனே அவர்களை அழைத்து நீ இந்த இடத்தில் நின்று எனக்குச் சேவை செய்தால்தான் நான் நெய்வேத்தியம் ஏற்றுக்கொள்ள முடியும் என்று சொல்கிறார். ஆகவே அவர்கள் இந்தப் பணிக்குரிய பெருமையைக் காப்பாற்றும் வகை யில் அதற்குண்டான சிவச் சின்னங்கள், ருத்தி ராட்ச மாலைகள் மற்ற இதர அணிகளோடு தோற்றத்திலேயே பார்த்த உடனேயே பக்திவரு மாறு அவர்கள் திகழவேண்டும். இப்பொழுது நம்மு டைய இந்து சமயத்தில் மக்களுக்கு நல்ல பற்றுதல் இருந்து வருகிறது என்பது என்னுடைய கருத்து. கோயிலுக்கு வருகிற பக்தர்களின் எண்ணிக்கை யும் நாளுக்குநாள் அதிகமாகி வருகிறது. நாம் இந்த நேரத்தைப் பயன்படுத்தி அவர்களுக்கு நம்மு டைய சமயத்தின் பெருமையைத் திருமுறைகளை ஓதுவதன் மூலம் பரப்ப வாய்ப்பிருக்கிறது. அதற் காகத் தான் ஓதுவார்களுக்குப் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடத்தினோம். பிறகு கிராமக் கோயில் களில் பணியாற்றக்கூடிய பூசாரிகளுக்குப் பயிற்சி அளித்தோம். அண்மையில் வைணவர்களுக்காக வைகானச ஆகமப் பயிற்றுச் வகுப்பினைப் பார்த்தசாரதி கோயிலில் நடத்தினோம். அதே போல் இப்பொழுது ஓதுவார்களுக்கு நடத்திக் கொண்டிருக்கிறோம். மாவட்டங்கள்தோறும் இந்த பயிற்சி வகுப்புகளைத் தொடர்ந்து நடத்தி அந்த வகுப்புகளிலும் தருமபுரம் சுவாமிநாதன், பேரா சிரியர் அ.ச.ஞானசம்பந்தம் போன்றவர்களைப் பயன்படுத்திக் கொள்ள இருக்கிறோம். ஓதுவா மூர்த்திகள் மேல், அரசும் அறநிலையத்துறையும் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறது. ஆகவே அர சின் ஆதரவுடன் உங்களுக்குச் சகலவிதமான வாய்ப்புகளையும் வசதிகளையும் செய்ய முன்வரு வோம் என்ற உறுதியைத் தெரிவித்து விடைபெற் றுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.


எமனையும் வெல்லலாம்...!
கதை வடிவம்: அருட்செல்வி
படம்: M.N. ராஜா
மறையவன் ஒருவன் தன் மனைவியுடன் மதுரைக்கு வந்துகொண்டிருந்தான். வழியில் ஒரு காடு வந்தது. "தாகமாக இருக்கிறது" என்று அவனுடைய மனைவி ஒரு மரத்தடியில் அமர்ந்து கொள்ள, நீரைத் தேடிப் போனான் அவன்.
ஓடையில் நீரை முகந்துக்கொண்டு மறையவன் விரைந்துவர அங்கே அவன் மனைவி மார்பில் அம்பு பாய்ந்து மாண்டு கிடந்தாள். "ஆ! என்னுயிரே! நீ எப்படி மாண்டாய்? உனைக் கொன்றது யார்?" என்று கதறி ஓடிய மறையவன் கண்களில் வேடன் ஒருவன் தென்பட்டான்.
"அடேய் பாதகா! நீதானே என் மனைவியைக் கொன்ற காதகன் நட மன்னனிடம்"
"மன்னா! எனக்கொன்றும் தெரியாது. நான் கொல்லவில்லை" என்று வேடனும் அழுது சாதிக்க அவனைச்
சிறையிலிட்ட பாண்டியன், சோமசுந்தரக் கடவுளை வணங்கி "இறைவா! அருள் செய்" என வேண்டினான்
நகர்வலம் வந்தால் உண்மை புலனாகும்

மறையவனுடன் மாறுவேடத்தில் நகர்வலம் வந்த மன்னன் ஒரு திருமண வீட்டிற்கு அருகே அஞ்சத்தக்க தோற்றம் கொண்ட இருவர் நிற்கக் கண்டு, மறைவாக நின்று கவனித்தான். அதில் ஒருவன் "நம் யமராஜா மாப்பிள்ளையின் உயிரை கவர்ந்து வரக் கட்டளை இட்டார். திடகாத்திரமாக உள்ள இவன் உயிரைக் கவர்வது எப்படி?

என்று கேட்டான். அதற்கு மற்றவன் "இதுவா பிரமாதம்? முன்பு மரக்கிளை ஒன்றில் பாய்ந்து நின்றிருந்த அம்பிணைக் காற்றினால் அசைத்து விழவைத்து மறையவன் மனைவியைக் கொன்றோமே! அதேபோல் இங்குக் கட்டியிருக்கும் மாடு, தன் கயிற்றினை அறுத்துப்போய் முட்டச் செய்து, இவனுயிரையும் கவர்வோம்" என்றான்







அவர்கள் பேச்சினால் அவர்களை எமதூதர்களாகத் தெளிந்து கொண்ட மன்னனும், மறையவனும் மேலும் நடப்பதைப் பார்க்க மறைந்திருந்தனர். அப்பொழுது அவர்கள் காணவே மாடும் கயிற்றினை அறுத்துக் கொண்டு போய் மாப்பிள்ளையை முட்டிக் கொன்றது. இதனால் தன் மனைவியின் மரணத்திற்கு வேடன் காரணமில்லை என்பதை மறையவனும் உணர, மன்னனும் வேடனை விடுவித்து, இருவருக்கும் வேண்டிய பொருள் அளித்து ஊருக்கு அனுப்பிவைத்தான். பழியஞ்சித் தனக்கு உண்மையை உணர்த்திய இறைவரையும் பாண்டியன் போற்றிடலானான்.!





மரணம் என்று வரும், எப்படி வரும், என்பது யாருக்கும் தெரியாது. முருகனை வணங்கினால் நோயிற் கிடவாமல் பாயிற் கிடவாமல் முத்தி பெறலாம் என்பார் சிதம்பர சுவாமிகள். நாமும் நமக்குத் தீய முடிவு இன்றி தூய முடிவு வர



[illegible] வணங்கிடுவோமாக!

# பக்த குசேலர்

கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

(முன்தொடர்ச்சி)

கணவனை வணங்கிய குணவதியான சுசீலா தேவி ''கண்ணன் கழலடி மறவாத என் கணவரே! உடலை வாட்டித்தவஞ் செய்தமையால் உத்தம ஞானம் உருவானவரே! உத்தம ஞானியருக்கு மனைவி மக்கள் என்ற உறவு கூட புரியாது. துன்புற்ற இந்த ஏழையின் வார்த்தையைக் கருணை கொண்டு கேட்டருளவேண்டும். பெற்ற மக்களைக் காப்பாற்றவேண்டிய கடமையில்தவறலாமா? தரித்திரம் என்னும் வறுமை மனிதரின் வெளி அழகைக் குறைத்துவிடும். உடலை வாட்டிவிடும். சோம்பலை உண்டாக்கும். இல்லாதவனோ பொல்லாதவனோ என்றபடி நற்குணங்களை மாற்றிவிடும். கணவன் மனைவியரின் கருத்து ஒருமித்த ஒற்றுமையைக் கெடுத்துவிடும். மானஅவமானத்தை மறக்கச் செய்யும். பொய்பேசவைத்துவிடும். வறுமையைப் போல் கொடுமை உலகத்தில் வேறு எதுவும் கிடையாது. யாதவர் குலத்தில் உதித்து உலக நாயகனாக விளங்கும் கண்ணபிரானுடன் தாங்கள் கல்வி பயின்றவர் எனக்கேட்டுள்ளேன். அவரிடம் சென்று நம் குறையைக் கூறிச் செல்வம் பெற்று நம் சிறுவர்களின் பசியைத் தீர்க்க வேண்டும். நல்ல நண்பன் ஒரு புதையலுக்குச் சமம் என்பர் பெரியோர். அது வீண்வார்த்தை அல்ல. தங்களுடன் கல்வி கற்ற கண்ணன் தங்களைக் கண்டவுடனேயே எல்லாவிதமான உதவிகளையும் செய்வார். நண்பர்களே உதவி செய்வார்கள். தெய்வங்களே நண்பர்களாக வந்தால் என்னதான் கிடைக்காது'' எனக் கூறினாள்.

நற்குணமும் நல்லொழுக்கமும் பக்தியும்சேர்ந்து உருவமான பெரியவரான குசேலர், சீலவதியான தம் மனைவியின் வார்த்தைகளைக் கேட்டு! கருணை கொண்டு பேசலானார். ''குழந்தைகளுக்காக இரக்கப்பட்டு வருந்தும் பேதைப்பெண்ணே, போன பிறவியில் புண்ணியம் செய்தவர்கள் இப்பிறவியில் நல்ல செல்வம் நிறைந்த இடத்தில் பிறந்து சுகவாழ்வு வாழ்கிறார்கள். அத்தகைய புண்ணியம் புரியாதவர்கள் நம் மாதிரி ஏழைகளின் வயிற்றில் பிறந்து வறுமையில் வாடுகிறார்கள். இதற்கு நீ ஏன் வருந்தவேணும். அவரவர் வினையை அவரவர் அனுபவிக்கின்றார்கள்.


குழந்தைகளைக் காப்பாற்றச் செல்வம் வேண்டுமென்கின்றாய். காட்டிலுள்ள பறவைகளும் மிருகங்களும் ஏதாவது வருமானம் உள்ளவையா? பொருள் சேர்த்து வைக்கின்றனவா? அல்லது நாளைக்கு என்ன செய்வோம் என நம்மைப் போல் கவலைப்படுகின்றனவா? இல்லாத கொடுமையால் ஒன்றையொன்று அடித்துக் கொண்டு சாகின்றனவா? மிருகம் பறவைகளில் பட்டினிச் சாவுகள் உண்டா? கல்லுக்குள் உள்ள தேரைக்கும் கருவில் உள்ள குழந்தைக்கும் அருள்புரிந்து காக்கும் கண்ணன் உனக்கும் என் மக்களுக்கும் மட்டும் இல்லாமல் போய்விட்டானா?

பணம் வந்தால் குணம்மாறிவிடும். தருமமே உருவான பெரியோர்களானாலும் செல்வம் வந்தால் மாறிவிடுவர்.

''அறம் நிரம்பிய அருளுடையஅருந்தவர்க்
கேனும்
பெறலரும் திரு பெற்றபின் சிந்தனை
பிறிதாம்''

என்பது பெரியோர் வாக்கு. சிறு தருமம் கூடச் செய்யமாட்டான் புதுப்பணக்காரன். 'கற்பகம் போன்று வாரி வழங்கும் வள்ளலே!' என்று ஏழை வந்து புகழ்ந்து கேட்டாலும் கவனியாது, கருணையின்றி வெளியில் துரத்துவார்கள். 'செல்வர்கட்கு அழகு செழுங்கிளை தாங்குதல்' என்பதை மறந்துவிடுவர். இவர்கட்குச் செல்வம் கிடைத்து என்ன பயன்? பணமுள்ளவன் இன்பத்துடன் வாழ முடியாது. அரசாங்கம் எந்தக்காரணம் கொண்டு பணத்தைப் பிடுங்கிக் கொள்ளுமோ என்று பயம். திருடன் வந்து விடுவானோ, தீப்பிடித்துவீடுமோ, நமக்கு மக்களில்லையே, பங்காளிகள் பணத்தைப் பிடுங்கிக் கொள்வார்களோ என்ற பயம். எனவே பணமுள்ளவன் பயமுள்ளவனாகக் காணப்படுகிறானே தவிர, நிம்மதி உண்டா? நல்லவரைத் தீயவர் எனக்கூறச் சொல்லும். தீயவரை நல்லவரெனப் பேச வைக்கும். பெண்கள் மீது அக்ரமமான ஆசை கொள்ளச் செய்யும். அதுமட்டுமா? 'கோடி பவுன் கொடுக்கிறேன் ஒரு வினாடி உயிர்கொடு, உறவினருக்கு ஒருவார்த்தை கூறிவருகிறேன் என்றால் யமதூதர் விட்டுச் செல்வாரா? ஆயுளை ஒரு வினாடிகூட அதிகமாக நீளச் செய்யமுடியாத இந்தப் பணத்தைக் கண்ணபிரானிடம் போய்க் கேட்பது சரியான செயலா? புதுப்பணம் வந்தால் பெரியவர்களை மதிக்கவிடாது. கர்வம் மேலிட்டு வாயுள்ளவர் ஊமையாகி விடுவர். காதுள்ளவர் செவிடு மாதிரியாகிவிடுவர். பணத்தின் மிதப்பில் எதிரில் உள்ள உற்றார் உறவினரைக் கூடப்புரியாது குருடு மாதிரியாகிவிடுவர்.

அம்மணி! எத்தனைப் பிறவி எடுத்தோமோ? எவர் எவர் அம்மா-அப்பா என அழைத்தாரோ? இன்னும் எத்தனைப் பிறவி எடுப்போமோ? எவர் எவர் அம்மாதிரி அழைக்கப் போகிறாரோ? நடுவில் வந்த இக்குழந்தைகள் என்னுடையது என்பது அறியாமை ஆகும். மக்களின் மீதுள்ள ஆசையினால் மதிமயங்குகின்றாய். பெரியவர்கள் இப்படி மயங்கமாட்டார்கள்.



பாம்பன் சுவாமி பாதயாத்திரைக் குழுவினர் சென்னை பாம்பன் சுவாமி ஆலயத்திலிருந்து கால்நடைப் பயணமாகப் பழநிக்குச் சென்றனர். பழநித் தக்கார் திரு க. பொன்னுசாமி, பி.எஸ்சி., யாத்திரையைத் தொடங்கி வைத்தபோது எடுக்கப்பட்ட படம்

குழந்தையைப் பெறும் அன்றே, 'தாய்வேறு பிள்ளை வேறு' ஆகி இருவருக்கும் உயிருக்கு ஆபத்தில்லாமல் இருக்கவேண்டும் எனத்துன்பம். வளர்க்கும் காலத்தில் ஜாக்கிரதையாக வளர்க்க வேண்டும் ஆபத்து வந்து விடக்கூடாதே எனத் துன்பம். குழந்தைக்கு நோய்வந்து வருந்தினால் அதுவும் துன்பம். குழந்தை பெரியதாகிவிட்டால் நம்மை எதிர்த்துப் பேசுவதால் துன்பம். குழந்தைக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டால் தாங்கமுடியாத துன்பம். குழந்தைகளால் என்றாவது இன்பம் உண்டா? சிறுவயதில் நாம் அதட்டினால் பயந்து நம் கால்களையே கட்டிக்கொண்டு பயந்து நடுங்கி நிற்கும் குழந்தை பெரியவனாகி விட்டால், வயது முதிர்ந்த தாய் தந்தையரை நடுங்கும்படியாகச் சீறிப்பேசித் தம் விருப்பப்படி நடப்பார்.

''இளமையில் இயற்றும் தண்டம் ஏற்றும்
எவ்வெறுப்பு உய்த்தாலும்
உளம் நடுநடுங்கிப் பின்னி உற்றுறப்பற்றி நிற்பார்
தளர்வறு பருவம் சார்ந்தால் தந்தை தாய்
நடுங்கச்சீறி
அளமறு தம்மனம் செல் அவ்வாறே ஒழுகி நிற்பார்''

அத்தகு குழந்தைகள் யார்? நீ யார்? இதெல்லாம் பேசும் நீ யார்? ஏதோ மாயசக்தி நம்மை எல்லாம் உறவாக பிணித்துள்ளது. இவர்களை எல்லாம் காப்பாற்ற நான் என்ன காக்கும் தெய்வமான திருமாலா?

தெய்வமான கண்ணனிடம் இந்தக் குழந்தைகளைக் காக்கவும் நம் உடலைப் பேணவும் செல்வத்தை வேண்டுவதா? இந்த நம் உடலே நன்றியற்றது. தினமும் உணவு கொடுக்கும் நாம், ஒரு நாள் கொடுக்க முடியாமல் போய்விட்டால், இந்த உடல் நம் உயிரை வெளித்தள்ளி விடுவேன் என்கின்றது. இத்தகைய நன்றி கெட்ட உடலைப் பேணுவது நல்லோர் செயல் அல்ல. பன்றிகள் நாற்றமுள்ள சாக்கடையில் அமிழ்ந்து மகா சுகம் என உறுமிக் களிப்பது போல, துன்பமயமான அறியாமை நிறைந்த இந்த வாழ்க்கைக் கடலில் நான் உழல மாட்டேன். நமக்குச் செல்வமும் வேண்டாம், துன்பமும் வேண்டாம். இதற்காக இறைவனிடம் போகவும் வேண்டாம்'' எனக் கூறி முடித்தார் உத்தம ஞானியான குசேலர்.

கணவன் எதிரில் நின்று பேசியறியாத சுசீலை என்னும் அக்கற்புக்கரசி, மக்கள் மீதுள்ள அன்பு-அவர்களது பசித்த நிலைகண்டு ஏற்பட்ட இரக்கம் காரணமாகவும் ''பெருமானே! தெய்வம் காக்கும் என்று தாங்கள் கூறுவது மறுக்கவே முடியாதது. உழுது முயற்சி செய்தால்தானே நிலத்தில் பயிர் விளையும். கடவுள் அளிப்பார் என முயற்சி செய்யாதிருந்தால் எப்படி?

முயற்சி திருவினையாக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்

என்ற பெரியாரின் வாக்கிற்கிணங்க முயற்சியில்லா விட்டால் வறுமை உண்டாகிவிடும் என்பது உலக வழக்கன்றோ! உணவுக்கான அரிசி முதலான, பொருள்கள் இருப்பினும் சமையல் என்ற முயற்சி இல்லாவிட்டால் உணவு எப்படி கிடைக்கும்? கலத்திலிருக்கும் உணவைக் கையால் எடுத்து வாயில் போட்டுக் கொள்ள முயற்சி செய்யாவிட்டால் பசி எப்படி நீங்கும்? கடவுள் தருவான் எனக்கையைக் கட்டிக் கொண்டிருந்தால் சரியல்லவே? முதலை யின் வாயிலகப்பட்ட யானை ''ஆதிமூலமே'' என அழைத்த முயற்சியின் விளைவே திருமால் யானையைக் காப்பாற்றிய தன்மை! எனவே முயற்சி செய்து கண்ணனைக் கண்டு நம் கவலை தீர வழி செய்ய வேண்டும்'' எனப் பணிந்தாள்.

''இந்தப் பெண் சொல்லுவதைப் பார்த்தால் கண்ணனைக் காணவேணுமெனத் தோன்றுகிறது. கண்ணனைச் சென்று காண்கிறேன். உலக நாயக னான அவனைத் தரிசித்த பெருமையும் பேறும் கிடைக்கும். இவளது மனக்கவலை நீங்கும்வண்ணம் கண்ணன் ஏதாவது உதவி செய்தால் அதுவும் நல்லதே'' என எண்ணிய அக்குசேலர் 'பெண்ணே! தெய்வ சந்நிதி, குருவினிருப்பிடம் முதலானவை களைக் காணச் சென்றால் அவர்கட்கு ஏதாவது காணிக்கை கொடுத்துக் காண வேண்டுமென்பது நீதிநூல். மலைபோன்ற தெய்வத்திற்கு நம்மால் மலைபோல் காணிக்கையளிக்க முடியாது. அன்பின் அடையாளமாக ஏதாவது கொண்டு செல்ல வேண்டுமே! என்ன செய்யலாம் ?'' என்றார்.

இதைக் கேட்ட சுசீலாதேவி 'இதற்கு என்ன செய்யலாம்?'' என எண்ணி, அன்றைய தினத்தி லிருந்து உண்ணாவிரதம் கொண்டு தினம் தினம் கொஞ்சம் தானியங்களைச் சேர்த்து வைத்து, ஒரு தினம் அவள் அந்த தானியத்தை நீரில் ஊற வைத்து எடுத்து வறுத்துத்தூய அவலாக மாற்றி னாள். கண்ணனுக்கு உகந்த நாளானஅட்டமியன்று ஆரம்பித்து கண்ணனது பிறந்த நட்சத்திரநாளான ரோகிணி வரை அவள் உண்ணாவிரதம் காத்தாள் என்பர். ஒருபிடி அவலே தேறியது. அதைக் கணவ னிடம் ஒரு துணியில் முடிந்து அளிக்க, அதைப் பெற்றுக் கொண்ட குசேலர் துவாரகை நோக்கிப் பயணமானார்.

ஊரைவிட்டே சென்றறியாத அப்பெரியவர் வழிதேடி அறிந்து சென்றார். மலைகளையும் காடுகளையும் நகரங்களையும் கடந்து சென்றார். வெய்யில் தாங்காது துன்புற்றார். 'வாவிகளே! குளங்களே! நீங்கள் உங்களிடம் தண்ணீர் இருந்த போது எமக்குக் குடிக்கவும் குளிக்கவும் உதவி னீர்கள். இன்று வற்றிப்போய் விட்டீர்கள். கவலை வேண்டாம். நீங்கள் கொடுத்த தண்ணீரை வியர்வையாக பூமியில் விடுகிறோம். ஊற்றாக மீண்டும் தண்ணீர் வர உலகிற்கு வர உதவுங்கள்'' என்பதற்காகவே மக்களின் உடம்புகளில்வியர்வை வழிந்தது என அழகான ஒரு கற்பனை நிரம்பிய செய்தியைப் பாடுகிறார் இக்கவிஞர் பெருமான்.

''வாவிகாள்! குளங்காள்! நீர் வற்றினீர்! முன்னளித்த
மேவிய இன்சுவைப் புனலால் வீங்கினோம்! இது பொழுது
பாவிய அப்புனல் அளிப் பேம்; பற்றும்! எனக்கால்வதுபோல்
பூவியல் மக்கள் உடம்பு பொங்கு நீர் வெயர்காலும்''

## காவி உடை அணிவதன் பயன்

விவேகானந்தர் ''தாமே துறவி. தம்மிடம் பிறருக்குக் கொடுக்கப்பொருள்கள்ஒன்றும்இல்லை'' என்பதைப் பிறருக்கு உணர்த்துவதற்காகத் தாம் காவி உடை அணிவதாக ஒரு முறை விளக்கம் கூறினார். ஆனால் துறவிகள் காவி உடை அணி வதற்கு வேறு சில காரணங்களும் கூறப்படுகின்றன.

துறவிகள் செம்பொருளைக் கண்டவர்கள். ஆகவே செம்மையான காவி உடையை உடுக் கிறார்கள். மேலும் செம்மண், விஷத்தை மாற்றும் ஆற்றல் வாய்ந்தது. நெருப்பு பட்டுப் புண்ணா னால் செம்மண் பூசுவது வழக்கத்தில் உள்ளது. வீட்டுச் சுவர்களிலும் கோயில் சுவர்களிலும் விஷப் பூச்சிகள் அண்டாமல் இருக்கவே செம்மண் கோடு இடுகிறார்கள்.

துறவிகள் கோயில்களிலும் மடங்களிலும் படுத்து உறங்கும்போது அவர்களை விஷப் பிராணிகள் தீண்டித் துன்பம் தராமல் இருக்கும் பொருட்டே, செம்மண்ணில் நனைத்த காவி யாடையைத் துறவிகள் அணிகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வெய்யிலில் வாடி, பசியால் வருந்தி, மரநிழல்களில் தங்கி, தண்ணீர் தாகத்தால் வருந்தியும் ''முகமறி யாத ஊர்களில் இரவு தங்குதற்கு யார் இடங் கொடுப்பார்'' என எண்ணிச் சென்றார். வழியில் ஓரிடத்தில் காலில் முள்தைத்துக் கால் ஊன்றி நடக்க முடியாமல், முள்வாங்கியும் இல்லாமல் (ஏதுமே எடுத்துச் செல்லாதவரிடம் முள்வாங்கி ஏது?) ஒரு புறமிருந்து தனக்குள் எண்ணலானார். 'மனிதன் தன் விருப்பப்படி காரியம் செய்ய வேண் டும். அல்லது ஆசிரியர் சொற்படி நடக்க வேண்டும். தன்னைக் காட்டிலும் இளவயதினளான பெண்-மனைவி-சொற்படி கேட்டு நடக்கலாமா? அவள் சொற்கேட்டு வெகுதூரம் நடந்து வெயிலால் வாடி மெலிந்து விட்டேன். எவரிடம் கேட்டாலும் துவாரகை இன்னும் வெகு தூரம் என்கிறாரே! நடுவில் வரும் ஆற்றைக் கடக்க படகோட்டிக்குக் காசு கொடுக்க என்ன செய்வேன்! கண்ணனது அரண்மனையில் வரவேற்பு எப்படியிருக்குமோ? கற்பக மரத்தையடைந்ததும் எட்டிக்கனியை வேண்டுவது போல் எம்பிரான் கண்ணனிடம் சென்று அழியக்கூடிய பொருளையா யாசிப்பது? எனினும் மனையாளிடம் கூறியபடி போய் வந்து விடலாம்'' என்றெல்லாம் பலவாறு எண்ணிநடந்து கொண்டே சென்றார்.

ஆற்றங்கரை வந்த காலத்தில் ஓடம்விடும் ஒரு வனைக் கண்டு, கண்ணனைக்காணத் தான் செல்லு வதாகக் கூற, அந்த படகோட்டி இரக்கமுற்றுக் குசேலரைத் தன் ஓடத்தில் ஏற்றி அக்கரையிலுள்ள துவாரகையில் சேர்ப்பித்தான்.

குசேலர் துவாரகையை அடைந்தார்.

(தொடரும்)

# திருப்பரங்குன்றத்திலே... நீ சிரித்தால்...!

செந்துறைமுத்து

குமரக்கடவுள் குடிகொண்டு எழுந்தருளிய திருப்பதிகளுள் திருப்பரங்குன்றம் மிகவும் சிறப்புக்கும் பெருமைக்கும் உரியதாகும். முருகன் என்று கூறியவுடன் அப்பெருமான் எழுந்தருளித் திகழும் ஆறுபடை வீடுகளும் மனக்கண்முன் வந்து நிற்றல் இயல்பு. திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை என்னும் ஆறும் அவ்வாறு படைவீடுகளாகும். ஆறுபடைவீடுகளில் முதன்மைப் படைவீடாகத் திகழ்வது திருப்பரங்குன்றம்.

திருப்பரங்குன்றத்தில்தான் முருகப்பெருமான் இந்திரன் புதல்வியாகிய தேவயானையைத் திருமணம் செய்துகொண்டு, புதுமணக் கோலத்தில் காட்சியளித்து விளங்குகின்றார். எனவே, இத்திருப்பதி பெருமையும் சிறப்பும் வாய்ந்ததாகும்.

**பரங்குன்றம்**

பாண்டிய நாட்டின் தலைநகராக மதுரை மாநகரம் விளங்கியது. அம்மதுரை மாநகர்க்குத் தென்மேற்குத் திசையில் ஆறுமைல் தொலைவில் திருப்பரங்குன்றம் அமைந்து விளங்குகின்றது. பாண்டியர் தலைநகரையடுத்து விளங்குவதால் பழங்காலந்தொட்டு சிறப்புடையதாகத் திகழ்கின்றது. மதுரையினின்று பரங்குன்றத்திற்கு செல்லப் புகை வண்டி நிலைய வசதியும், பேருந்து வசதியும் உள்ளன.

திருப்பரங்குன்ற நகரின் நடுவில் சுமார் முந்நூறு அடி உயரத்தில் குன்று காட்சியளிக்கின்றது. அக்குன்றினுக்கும் 'பரன் குன்று' என்று பெயர். பரன் என்னும் சொல் சிவனைக் குறிப்பதாம். அக்குன்று சிவலிங்க வடிவில் அமைந்துள்ளதால் அப்பெயரினைப் பெற்றது. பரன்குன்று என்னும் அப்பெயர் பின்னர் டரங்குன்று என்று வழங்கப் பெற்றது. 'திரு' என்பது அதன் சிறப்பையுணர்ந்து அடைமொழியாக நின்று திருப்பரங்குன்றம் என வழங்கப்பெற்று வருகின்றது.

மதுரை தலைநகராக இருந்த கடைச்சங்கக் காலத்திலும் பரங்குன்றம் விளங்கியதால் திருமுருகாற்றுப்படை, பரிபாடல், மதுரைக்காஞ்சி, கலித்தொகை, அகநானூறு முதலிய சங்க நூல்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.

''மாடமலி மறுகில் கூடல் குடவயின்''
—திருமுருகாற்றுப்படை

''கூடற் குடவயின் பரங்குன்றம்''
—அகநானூறு

**குன்றப் பொலிவு**

குன்றம் என்றால் அது வளமும் பொலிவும் செறிந்ததாகத்தான் இருக்கும். திருப்பரங்குன்றம் வளத்திலும் பொலிவிலும் சிறப்புற்றதாகும். மதுரையிலிருந்து திருப்பரங்குன்றம் வரையில் வழி நெடுகச் சோலைகள் இருந்தன. குன்றத்தின்கண் மரங்கள் அடர்ந்திருந்தன; பொய்கையில் நீர் நிறைந்திருந்தமையாலும், அருவியும் சுனையும் இருந்தமையாலும் இயற்கைப் பொலிவு கொலுவிருந்தது.

குன்றத்துக் குமரவேளை வழிபட வருவோர் தத்தம் உள்ளத்துக் குறையினை, விருப்பத்தை எடுத்துக் கூறி வழிபட்டு அருவியில் நீராடி விளையாடுவதும், குமரவேள் கோயிலில் வழிபாட்டுப் பாடல்களைப் பாடி ஆடுவதும் இடைவிடாது நிகழ்ந்துள்ளன.


குன்றத்துக்குமரன் கோயிலில், விழா நிகழுங் காலத்தில் பாண்டிய மன்னன் தன் பரிவாரங்களுடன் சென்று வழிபடுவது வழக்கம். அவ்வாறு அவர்கள் விழாவிற்குச் செல்லுங்கால் ,அவர்கள் இவர்ந்துவந்த யானை, குதிரை ஆகியவற்றைக் குன்றத்து மரத்தடிகளில் நிறுத்தி வைத்தனர். இவையெல்லாம் அக்குன்றத்திற்குப் பொலிவையும் சிறப்பையும் அளிப்பனவாயமைந்தன.

திருப்பரங்குன்றத்தின் இயற்கைப் பொலிவினைத் திருமுருகாற்றுப் படையில் நக்கீரனார் மிகவும் அழகுபட விரித்துரைக்கின்றார்.

''மாடமலி மறுகிற்கூடற் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்து வாய்
அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எற்படக்
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந்து உறைதலும் உரியன்''

மாடங்கள் நிறைந்த வீதிகளையுடைய மதுரையின் மேற்கே திருப்பரங்குன்றம் அமைந்துள்ளது. நக்கீரனார் 'குன்றம்' என்ற பெயரால் திருப்பரங்குன்றத்தைக் குறித்துள்ளார்.

குன்றத்தின் அடிவாரத்தை யடுத்து வயல்கள் உள்ளன. நிலவளத்தைக் காட்டும் வகையில் அவ்வயல்கள் கரிய சேறுநிரம்பிக் காட்சியளிக்கின்றன.



**முருகன்அடியார் எமனைக் கண்டு அஞ்சமாட்டார்கள். அவர்களுக்கு மரண பயம் இல்லை. எருமையில் ஏறிவரும் எமனை ஏறுமயில் ஏறிவந்து தடுத்துத் தம்திருவடிகளில் வைத்துக் கொள்வான் முருகன் என்பதை,**

**"மரணப் பிரமாதம் நமக்கில்லை'' என்ற பாடலாலும்**

**"தண்டாயுதமும் திரிசூலமும் விழத் தாக்கி உன்னைத்**
**திண்டாட வெட்டி விழவிடுவேன் செந்தில்வேலனுக்குத்**
**தொண்டாகிய என்மேல் என்னவிரோதம் ஞானச்சுடர்வடிவாள்**
**கண்டாயடா அந்தகா வந்துபார் சற்றென்கைக்கெட்டவே''**

**என்ற பாடலாலும் அருணகிரிநாதர் குறிப்பிட்டுள்ளார்.**

அவ்வகன்ற வயல்களில் நீர் தேங்கிய இடங்களில் தாமரை மலர்கள் மலர்ந்துள்ளன. முட்களைத் தாளிலேயுடைய தாமரைக் கொடிகள் பரவிக் கிடக்கின்றன. தாமரை மலரிலுள்ள தேனுக்கும் தாதுக்கும் ஆசை கொண்ட வண்டுகள் பகல் நேரத்தில் அம்மலர்களில் வந்து ஊதுகின்றன. பின்னர் மாலைக்காலம் வரவே தாமரை மலர்கள் இதழ்களாகிய கதவை அடைத்து விடுகின்றன. மெத்தென்ற அகவிதழ்களையுடைய அம்மலருக்குள் வண்டுகள் நலமாக உறங்குகின்றன. பின்னர், விடியற்காலை வரவே தாமரை இதழ்க்கதவு சற்று நெகிழவே அவ்வண்டுகள் துயில் எழுகின்றன.

தாமரைப் படுக்கையினின்று எழுந்த அவ்வண்டுகள் அருகில் தேன் கமழ்கின்ற நெய்தல் மலரில் சென்று தாது ஊதி அதில் உள்ள தேனைக் குடிக்கின்றன. பின்னர், கதிரவன் உதயமாகின்றான். அப்போது அவ்வண்டுகள் குன்றத்தின் சாரலைக் காண மேலே பறந்து செல்கின்றன.

மேலே பறந்து சென்ற வண்டுகள், சுனையில் பல மலர்கள் மலர்ந்திருத்தலைக் கண்டு, அம்மலர்களிடத்துச் சென்று தேனை உண்டு ரீங்காரம் செய்கின்றன.

வண்டுகள் இவ்வாறு உறையுளும் உணவும் பெற்று இன்பமாக வாழும் இடமாகவும், வயலும் பொய்கையும் சூழ்ந்த வளமான இடமாகவும் திருப்பரங்குன்றம் அமைந்து விளங்குகின்றது என்று, நக்கீரனார் திருப்பரங்குன்றத்தின் சிறப்பினையுணர்த்துகின்றார்.

**குமரன்கோயில்**

குன்றின் வடபாகத்தில் குமரப் பெருமானது அழகுக் கோயில் அமைந்துள்ளது. கோயிலின் கோபுர வாயிலுக்கு முன்னால் ஆத்தான மண்டபம் அமைந்துள்ளது. அம்மண்டபத்தைச் சுந்தரபாண்டியன் மண்டபம் என்று வழங்குவர். அம்மண்டபம்

சுமார் அறுபத்தாறு தூண்களைக் கொண்ட பெரிய மண்டபமாகும். அம்மண்டபத் தூண்களை நுண்ணிய வேலைப்பாடமைந்த யாளிகள், குதிரை வீரர்கள், சிவனின் திரிபுர தகனக்கோலம் முதலிய சிற்பங்கள் அழகு செய்கின்றன. மண்டபத்தின் நடுவண் அமைந்த தூண்களில் நர்த்தன விநாயகர், துர்க்கை, தேவசேனா, தேவி, வீரவாகு தேவர் முதலிய நுண்கலைச் சிற்பங்கள் காட்சியளிக்கின்றன. அவற்றுள் தேவசேனா தேவியின் திருமணக் கோலச் சிற்பம் மிகவும் அற்புதமானது.

ஆத்தான மண்டபத்தையடுத்து எழுநிலைகள் கொண்ட இராசகோபுரமும் கலியாண மண்டபமும் அமைந்துள்ளன. கலியாண மண்டபத்தின் கிழக்குப் பாகத்தில் இலக்குமி தீர்த்தமும், மேற்குப் பாகத்தில் சந்நியாசிக் கிணறும் அமைந்துள்ளன. சந்நியாசிக் கிணற்றைப் 'பிரம்மகூபம்' என்றும் வழங்குவர். இவ்வாறு வழங்குவதற்குக் காரணம், அது பிரம்மனால் படைக்கப்பட்டது என்பதாகும். இக் கிணற்றில் மூழ்கிக் கோவித்தாரத்துவசன் என்ற பாண்டியன், தன்னைப் பிடித்திருந்த வெண்குட்டத்தைப் போக்கிக் கொண்டதாக வரலாறுகள் உணர்த்துகின்றன. இக்காலத்திலும் நீரழிவு முதலிய நோய்களைக் குணப்படுத்துவதாகக் கூறப்படுகின்றது. இதன் நீரையே குமரப் பெருமானின் அபிடேகத்திற்குப் பயன்படுத்தி வருகின்றனர். கலியாண மண்டபத்தை அடுத்துக் கொடிமர மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத்திற்குப் படிகள் வழியாகவே ஏறிச் செல்லுதல் வேண்டும். கொடிமரத்தின் முன்புறம் மயில், நந்தி, மூகம் ஆகிய மூன்று வாகனங்களும் ஒரு சேர அமைந்துள்ளன. இவ்வாறு அமைந்துள்ளது குன்றத்துக்கு ஒரு பெருஞ்சிறப்பாகும்.

கொடிமர மண்டபத்தையடுத்து மகாமண்டபம் அமைந்துள்ளது. அம்மகா மண்டபத்திற்குச் செல்லும் படிக்கட்டுக்களின் அருகில் வேத வியாசர் முதலிய முனிவர்களின் சன்னதிகளும், அண்டராபரணர் முதலிய பூதகணத் தலைவர்களின் சன்னதிகளும் அமைந்துள்ளன. மகாமண்டப வாயிலின் இருமருங்கிலும் இரட்டை விநாயகரும் நந்தி தேவரும் அமர்ந்துள்ளனர்.

மகாமண்டபத்தில் சோமாஸ்கந்தர், நடராசர், சண்டிகேசுவரர், நவவீரர்கள், தட்சிணாமூர்த்தி, பைரவர், சந்திரன், சாயாதேவி சமிஞாதேவி சமேத சூரியன் ஆகியோரின் சன்னதிகள் அமைந்துள்ளன. மண்டபத்தின் கீழ்ப்பாகத்தில் உள்ள கோயிலில் வள்ளி தேவயானையோடுள்ள ஆறுமுகப் பெருமானுக்கும், அருணகிரிநாதர், பஞ்சலிங்கம், சுவரதேவர், சனீஸ்வரபகவான் முதலியோருக்கும் சன்னதிகள் அமைந்துள்ளன. மண்டபத்தின் மேல் பாகத்தில் கோவர்த்தனாம்பிகை சன்னதி அமைந்துள்ளது.

மகாமண்டபத்திலிருந்து மலையைக் குடைந்து உருவாக்கப்பட்ட கர்ப்பக் கிருகத்தையுடைய அர்த்த மண்டபத்தை அடைய ஆறுபடிகளைக் கடந்து செல்ல வேண்டும். அந்த ஆறு படிகளும் சடாட்சரப் படிகளாகக் கருதப்படுகின்றன.

கர்ப்பக்கிருகத்தில் ஒரு பெரிய பாறை உள்ளது. அப்பாறையின் மத்தியில் மகிஷாசுர மர்த்தினியின் உருவமும் அதனருகில் கீழ்ப்பாகத்தில் மூலவரான முருகப் பெருமானின் திருமணக் கோலமும், மேற்பாகத்தில் கற்பக விநாயகரின் உருவமும் அதியற்புதமாகக் குடைந்து வடிக்கப்பெற்றுள்ளன.

## தேங்காய் உடைப்பதன் தத்துவம்

தேங்காய்க்கு மேலே உள்ள பச்சைமட்டை மாயாமலத்தையும், உரித்து எடுக்கின்ற நார்கள் கன்ம மலத்தையும், சன்னதியில் உடைத்து எடுக்கின்ற ஓடு ஆணவ மலத்தையும் சுட்டுவனவாகும். இந்த மும்மலங்களும் நீங்கினால் தூய உள்ளத்தைக் குறிக்கும் வெண்மையான பருப்பு வெளிப்படுகின்றது.

மும்மலமும் நீங்கித் தெய்வத்தை அடையக் கூடிய பரிபக்குவத்தைப் பெற்றுவிட்டதை அறிவிப்பதன் அடையாளமாகவே சன்னதிகளில் தெய்வங்களுக்குத் தேங்காய் உடைக்கின்றோம்.

முருகப் பெருமானது திருவடியின் கீழ், அப்பெருமானது வாகனங்களாகியயானை, ஆடு ஆகியவற்றின் உருவங்களும் காவல் தேவதைகளின் உருவங்களும் பாறையில் வடிக்கப் பெற்றுள்ளன. இந்த யானை இந்திரனுடைய ஐராவதம் என்றும் தேவயானையைப் பிரிய மனமில்லாது முருகனுக்குத் தொண்டு புரிய வந்து நிற்கிறது என்றும் கூறுவர்.

மூலவரான முருகப் பெருமானின் சன்னதிக்கு அருகில் மலையைக் குடைந்து அமைக்கப்பெற்ற கோயிலில், பவளக் கனிவாய்ப் பெருமாள் மகாலக்குமி யுடனும் மதங்க முனிவருடனும் காட்சியளிக்கின்றார். இக்கோயிலின் வெளிப்புறச் சுவரில் ஆதிசேடன் மீது பாற்கடலில் அமர்ந்திருக்கும் பெருமாள், வராகமூர்த்தி முதலிய உருவங்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

கற்பக விநாயகருக்கு அருகிலுள்ள குடைவரைக் கோயிலில் சத்ய கிரீஸ்வரர் என்னும் சிவ பெருமான், சிவலிங்க வடிவில் காட்சியளிக்கின்றார். இக்கோயிலின் உட்புறச் சுவரில் சோமாஸ்கந்தரின் உருவமும், வெளிப்புறச் சுவரில் ஆதிசேடன் மீது பாற்கடலில் அமர்ந்திருக்கும் பெருமாள், வராகமூர்த்தி முதலிய உருவங்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

கற்பக விநாயகருக்கு அருகிலுள்ள குடைவரைக் கோயிலில் சத்யகிரீசுவரர் என்னும் சிவ பெருமான், சிவலிங்கவடிவில் காட்சியளிக்கின்றார். இக்கோயிலின் உட்புறச்சுவரில் சோமாஸ்கந்தரின் உருவமும், வெளிப்புறச் சுவரில் சிவபெருமான் பார்வதி உருவங்களும் காட்சியளிக்கின்றன.

அர்த்த மண்டபத்தின் கீழ்ப்பால் உள்ள குகை கோயிலில் அன்னபூரணி தேவி தன் பரிவாரங்களுடன் காட்சியளிக்கின்றாள்.

திருமணக்கோலம் கொண்ட முருகப்பெருமான், உயர்ந்த இடத்தில் எல்லாத் தெய்வங்களும் சூழக் காட்சியளிக்கின்றார். அப்பெருமானின் திருமணச் சடங்கிற்கு அனைத்துத் தெய்வங்களும் வந்து சூழ்ந்துள்ளன எனக்கூறும் வகையில் கர்ப்பக் கிருகம் அமைக்கப் பெற்றுள்ளது.

குன்றின் அடிவாரத்தின் கீழ்த்திசையில் சரவணப் பொய்கையும் அமைந்துள்ளது. இப்பொய்கை, முருகப் பெருமானது திருக்கை வேலினால் உண்டாக்கப்பட்டது என்று கூறுவர். இப்பொய்கையினைக் கண்டாலும், கையினால் தீண்டினாலும் கருதும் காரியம் கைகூடும் என்றும் கூறுவர்.

### தென்பரங்குன்றம்

திருப்பரங் குன்றத்தின் தென் பகுதிக்குத் தென்பரங்குன்றம் என்று பெயர். அத்தென்பரங் குன்றத்தில் உமையாண்டவர் கோயில் என்று வழங்கப் பெறுகின்ற குடைவரைக் கோயில் ஒன்று அமைந்துள்ளது. இக்கோயிலின் வெளிப்புறச் சுவரில் பைரவர், விநாயகர் முதலிய தெய்வங்களின் திருவுருவங்கள் செதுக்கப் பெற்றுள்ளன. உட்புறச் சுவரில் நடராச தாண்டவம், வள்ளி தேவானையுடன் கூடிய முருகப் பெருமான் ஆகியாரின் சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோயிலில் கல்வெட்டுக்களும் உள்ளன. இக்கோயிலை மத்திய அரசு சிற்பக்கலை பாதுகாப்பு இலாகாவினர் பழங் கலைச் சின்னமாகப் பாதுகாத்து வருகின்றனர்.

தென்பரங் குன்றத்தின் மேற்குப் பகுதியில் மலைமீது சிறிது தொலைவில் பஞ்சபாண்டவர் படுக்கை என வழங்கப்பெறும் குகை ஒன்று உண்டு. அக்குகையினுள் கல்லில் செதுக்கப்பெற்ற ஐந்து படுக்கைகளும், சுனையும் அமைந்துள்ளன.

மலையின் உச்சியில் இரு பாறைகட்கு இடையில் சிக்கந்தர் பாஷா என்ற முகமதியப் பெரியாரின் சமாதியும் அதன் முன் மண்டபமும் உள்ளன. அம்மண்டபமும், அதன் மேல் உள்ள ஸ்தூபிகளும் முறையே இந்து முறையிலும் ,இசுலாமிய முறையிலும் அமைக்கப் பெற்றுள்ளன. திருப்பரங்குன்றம் இந்துக்களும் முகமதியர்களும் வேறுபாடற்ற நிலையில் இணைந்து வாழ்கின்றனர் என்பதற்கு அறிகுறியாக அம்மண்டபம் அமைந்து விளங்குகின்றது.

அம்மண்டபத்தின் தென் பகுதியில் மலைமீது காசி விசுவநாதர் கோயிலும் அதன் அருகில் வற்றாத காசிச் சுனைத் தீர்த்தமும் உள்ளன. இக்கோயிலுக்குச் செல்லுப் பாதையில் மீன்படகு போன்ற பாறை அழகுற்று விளங்குகின்றது. இக்கோயிலின் முன்னர் அழகான கல்மண்டபம் கட்டப்பெற்றுள்ளது. காசிச்சுனையின் மறுபக்கம் உள்ள பாறையில் சிற்ப வேலைப்பாடமைந்த பல தெய்வ உருவங்கள் செதுக்கப் பெற்று விளங்குகின்றன. இச்சுனையும் முருகனது வேலினால் உண்டாக்கப்பட்டது என்றும், கங்கைக்கு இணையானது என்றும் கூறுவர்.

குன்றின் அடிவாரத்து வடபகுதியில் சிறிய தொலைவில் சத்தியகூபம் என்ற தீர்த்தமும் உள்ளது. இத்தீர்த்தத்தில்தான் பெருமானது தெப்பத் திருவிழா நடைபெறுகின்றது. மற்றும், தைப்பூசத் திருவிழா பத்து நாட்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

### வழிப்படும் முறை

குன்றத்து அமர்ந்த குமரப்பெருமானைக் கண்டு வழிபடச் செல்வோர் ஒரு முறையினைப் பின்பற்றுதல் வேண்டும், அதாவது, சிவபெருமானும் முருகப்பெருமானும் உண்மையில் ஒருவரேயாயினும், பிரணவமந்திர வகையில் உலக நியதிக்குப் புறம்பாக நடந்து கொண்டமையால், நீதியை நிலைநிறுத்த வேண்டிக் குருமூர்த்தி திருப்பரங்குன்றத்தில் வந்து தவம் செய்தார். இறுதியில் சிவனும் பார்வதியும் அவருக்குக் காட்சி தந்து பரங்கிரிநாதர், ஆவுடை நாயகி எனப் பெயர் பெற்றனர். குமரப் பெருமானால் வழிபடப் பெற்ற பரங்கிரிநாதர், ஆவுடை நாயகி கோயில் இப்போது மீனாட்சி கோயில் என்ற பெயரில் அமைந்துள்ளது. இக்கோயிலுக்குச் சென்று வழிபட்ட பின்னரே குமரப்பெருமானது கோயிலுக்குச் சென்று வழிபட வேண்டும் என்பது வழிபட வேண்டிய முறையாம்.

### ஓசை வேறுபாடு

திருப்பரங்குன்றத்துக் குமரப்பெருமான் சன்னதியில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வழிபட வந்தோரின் பாடல் ஓசையும், ஆடல் ஓசையும் வாத்தியங்களின் ஓசையும், இயற்கையின் ஓசையும் ஒன்றோடொன்று வேறு பட்டொலிக்க அவற்றை ஏற்று முருகப்பெருமான் உவந்தார் என்று நல்லழிசியார் என்னும் சங்கப்புலவர் கூறுகின்றார்.

திருப்பரங்குன்றத்தின் ஒரு பக்கத்தில் பாணர்கள் வாசிக்கும் யாழின் இனிய இசை எழுந்தது; மற்றொரு பக்கத்தில் அதற்கு மாறாக, அம்மலையில் மலர்ந்துள்ள மலர்களில் உள்ள தேனை உண்பதற்காகப் புதிது புதிதாக வரும் வண்டுகள் ஒலிக்கும் இசை எழுந்தது.

ஒரு பக்கத்தில் கணுக்கள் பொருந்திய புல்லாங்குழலின் இனிய இசை எழுந்தது; மற்றொரு பக்கத்தில் அதற்கு மாறாக, இராகம் போன்று ஒலிக்குப் தும்பிகளின் பரந்த ஓசை எழுந்தது.

ஒரு பக்கத்தில் மார்ச்சனை அமைந்த மத்தளத்தின் ஓசை எழுந்தது. மற்றொரு பக்கத்தில் அதற்கு மாறாக, பெருமையிற் சிறந்த நீண்ட மலையினின்று விழும் அருவி நீர் ஒலித்தது.

ஒரு பக்கத்தில் பாடுதலில் வல்ல கூத்தியர் அசைந்து ஆடினர். மற்றொரு பக்கத்தில் அதற்கு மாறாக, வாடைக் காற்று வீசுவதால் பூங்கொடிகள் அசைந்து ஆடின.

ஒரு பக்கத்தில் பாடினி' 'பாலைப்பண்' என்னும் இசையினைத் தன் கண்டத்தால் பாடினாள். அவ்விசையில் நெடிய கிளர்ச்சியையுடைய கிழமை நிறை குறை என்னும் இசைக் கூறுகள் தோன்றின. மற்றொரு பக்கத்தில் அதற்கு மாறாக தோகையை விரித்து ஆடும் சிறப்பினையுடைய மயிலினது அரித்தெழும் குரலில் அக்கிழமை மூன்றும் தோன்றின.

இவ்வாறு ஒன்றினுக்கொன்று மாறுபட்டன போன்று எழுகின்ற ஓசை வேறுபாடுகளை ஏற்றுக் கொள்ளுதலை, குமரன் குடிகொண்டு எழுந்தருளிய திருப்பரங்குன்றம் உடையதாயிருந்தது என்று நல்லழிசியார் கூறுகின்றார்.

இவ்வோசை வேறுபாடு அன்று மட்டுமன்று, அன்றுதொட்டு இன்றுகாறும் திருப்பரங்குன்றத்தில் ஒலித்து வருகின்றது. இன்னோசைகள் இடையறாது எழுந்த வண்ணம் இருக்கும். அப்பரங் குன்றத்தில் ஒளிரும் முருகப்பெருமான் திருவடி மலரைச் சிந்தையில் இருத்திக் கவலையும் துன்பமும் மாற்றி இன்புறுதல் மன்பதையின் கடமையாம்.

இருப்பரங்குறைத்திடு மெஃக வேலுடைப்  
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை  
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய  
திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவாம்.

—கந்தபுராணம்.




வைணவ சமயத்தின் முன்னோடிகளாக விளங்கும் ஆழ்வார்கள் வைணவத்திற்கும் தமிழுக்கும் ஆற்றிய தொண்டு அரியதும் பெரியதும் ஆகும். ஆழ்வார்கள் பக்தியின் மூலம் இறைவனது திருவடிகளை மனிதன் அடையமுடியும் என்பதையும் ஆழ்ந்த பக்தியும் மனிதனை உயர்வடையச் செய்யும் என்ற கொள்கை கொண்டு வாழ்ந்து காட்டி உலகிற்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினார்கள். ஆழ்வார்களது திருப்பாடல்கள் யாவும் இறை உணர்வை புகட்டவல்லதாயும் உலக இன்பங்களின் மூலம் மனிதன் தன் நேரத்தையும் காலத்தையும் வீணாகக் கழிப்பதைத் தெளிவாக சுட்டிக் காட்டி அதன் மூலம் மக்களை நல்வழிப்படுத்தும் நோக்கமே பக்தி மார்க்கம் என்ற நிலையில் அமைந்துள்ளன. அவ்வாறு உலகியல்பால் அவர்கள் கொண்ட சிரத்தையின் காரணமாகவே இன்றைக்கும் ஆழ்வார்களின் கருத்துகள் (வைணவப்பெரும் சமயம்) ஆல்போல் தழைத்து ஓங்கி விழுதுகள் பல கொண்டு பல்வேறு நிலையில் பரந்து மக்களின் ஆன்ம வளர்ச்சிக்கு பேருதவி புரிந்து வருகிறது.

வாழ்வாங்கு வாழ்ந்த அந்தஆழ்வார்களில் முதன்மையான மூவர் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் என்ற பெருமை படைத்துள்ளார்கள். அவர்கள் பொய்கையார், பூதத்தார்,. பேயார் என்ற முதலாழ்வார்கள் மூவர் ஆவர். இம் முதலாழ்வார்கள் மூவரும் ஐப்பசி மாதத்திலேயே தோன்றினார்கள் என்ற செய்தியை மணவாள மாமுனிகள் கீழ்க் காணும் பாடல் மூலம் தெளிவு படுத்தியுள்ளார்.

''ஐப்பசியி லோணம் அவிட்டம் சதயமிவை
ஒப்பிலா நாள்கள் உகந்தீர்! எப்புவியும்
பேசுபுகழ்ப் பொய்கையார் பூதத்தார் பேயாழ்
தேசுடனே தோன்று சிறப்பால்''. [வார்

முதலாழ்வார்கள் மூவரும் ஒரே காலத்தவர்கள் ஆயினும் வெவ்வேறு ஊர்களில் தோன்றி வளர்ந்தவர்கள். அவர்களின் வரலாற்றினைப் பின் வருமாறு காண்போம்.

**பொய்கையாழ்வார்**

''தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோருடைத்து'' என ஒளவையார் புகழ்ந்து பாடிய தொண்டை நாட்டின் மிக முக்கியமான நகர் காஞ்சிமாநகர் ஆகும். இந்நகரை வட மொழியில் ''ஸத்ய வரதக்ஷேத்திரம்'' என்று புகழ்ந்து கூறுவர். இக்காஞ்சி மாநகரே ''முத்தி தரும் நகரேழில் முக்கியமாங் கச்சி'' என சான்றோர்களால் புகழப்படுகிறது. இந்நகரம் வேகவதி என்னும் புண்ணிய நதியின் தென்பால் அமைந்துள்ளது. இத்தகு புகழ் வாய்ந்த காஞ்சி மாநகரினூடே அமைந்துள்ள யதோத்தகாரி என்றும், திருவெஃகா என்றும் வழங்கப்பட்டு வரும் அருள்மிகு யதோத்தகாரி பெருமாள் திருக்கோயிலின் வட புறத்தில் அமைந்துள்ள பொற்றாமரைப் பொய்கையிலே பூத்த ஒரு தாமரைப் பூவில் எல்லாம் வல்ல ஸ்ரீமந்நாராயணன் திருவுள்ள விருப்

## பொன்மொழி

**அஞ்சுவது யாதொன்றும் இல்லை**
**அஞ்ச வருவதும் இல்லை.**

—அப்பர்

---

பத்திற்கிணங்க ஐப்பசி மாதத்தில் திருவோண நட்சத்திரத்தில் பொய்கையார் தோன்றினார். இவருடைய எழிலைக் கண்ட அனைவரும் அதிசயத்தில் ஆழ்ந்து திருமாலின் இடக்கையில் பொருந்தியுள்ள பாஞ்சன்னியம் என்னும் திருச்சங்கின் அம்சமாக வழிபட்டனர். இவர் பொய்கையில் பிறந்ததால் பொய்கையாழ்வார் என்று பெயர் பெற்றார்.

**பூதத்தாழ்வார்**

பொய்கையாழ்வார் தோன்றிய இதே தொண்டை நாட்டின் கடற்கரை நகரமான திருக்கடல்மல்லை எனப்புகழப்படும் இன்றைய மகாபலிபுரத்தில் திருமாலின் விருப்பப்படி குருக்கத்திப் பந்தலிலே ஒரு குருக்கத்தி மலரில் பூதத்தார் அவதரித்தார். இவர் ஐப்பசி மாதத்து அவிட்ட நட்சத்திரத்திலே தோன்றினார். இவருடைய பேரழகினைக் கண்ட அனைவரும் திருமாலின் கௌமோதகி என்னும் கதாயுகத்தின் அம்சமெனக் கருதினர். இவருடைய திருநாமமான பூதம் என்னும் சொல் வடமொழியில் ஸத்தைப் பெற்றது என்று பொருளாகும். திருமாலின் திருக்குணங்களை அனுபவிப்பதில் ஆனந்தம் பெற்றார். இதனால் இவருக்கு பூதத்தாழ்வார் என்னும் பெயர் வழங்கலாயிற்று.

**பேயாழ்வார்**

தொண்டை நாட்டின் சிறப்பு வாய்ந்த வைணவத்தலமான திருவல்லிக்கேணியின் பக்கத்தில் அமைந்துள்ள திருமயிலை நகரின் ஒரு கிணற்றிலே செவ்விதழ்களைக் கொண்ட அல்லிமலர் ஒன்றிலே ஐப்பசி மாதத்தில் சதய நட்சத்திரத்தில் பேயாழ்வார் அவதரித்தார். இவருடைய திருமேனியைப் பலரும் நந்தக மென்னும் வாட்படையின் அம்சமாக போற்றினார்கள். இவர் திருமால் பேரில் எல்லையில்லா பக்தியும் இடைவிடாத இறை சிந்தனையும் கொண்டொழுகியதால் அவரைக் கண்டவர்கள் அனைவரும் ''இவர் (பக்தியென்னும்) பேய் பிடித்தவர்'' என்றே கருதினர். ஆழ்வாரும் நெஞ்சமெல்லாம் பதறிக் கண்களை சுழற்றி அழுவதும் சிரிப்பதும் தொழுவதும் கூத்தாடுவதும் இறைவனை எண்ணி எண்ணி மகிழ்வதுமான செய்கைகளில் ஈடுபட்டுவந்தார். இதனாலேயே இவர் பேயாழ்வார் என்ற திருநாமம் பெற்றார். பரம பக்தி தலையெடுத்து எம்பெருமானை அனுபவிக்கும் ஆற்றல் மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் இவ்வாழ்வார்க்கு மிக அதிகமாயிருந்தது. இவர் திருமாலின் பேரில் கொண்ட எல்லையில்லா பக்தியின் காரணமாக திருமாலுக்கு உகந்தவர் ஆனார். சிவ வாக்கியர் என்ற பெயரில் வாழ்ந்து வந்த சைவ யோகியை வைணவத்தின் பால் ஈடுபடுத்தி அவரை திருமழிசை ஆழ்வாராக்கிய பெருமை பேயாழ்வார் பெருமகனாரையே சாரும். திருமழிசை ஆழ்வார் வைணவத்துக்கும் தமிழுக்கும் பெரும்தொண்டாற்றிய பேயாழ்வார்தொண்டினை நிலைபெறச்செய்தார்.

இம்முதலாழ்வாகள் மூவரும் ஐப்பசி மாதத்திலேயே வரிசையாக அடுத்த அடுத்த நாள்களிலேயே திருவோணம் அவிட்டம் சதயம் என்ற வரிசையில் அவதரித்த பெருமையுடையவர்கள் ஆவர். இம்மூன்று ஆழ்வார்களுக்கும் திருமாலின் ஆணையின்பேரில் சேனை முதலிகள் என்ற வைகுந்த வாசனின் அடியார் குழாத்தைச் சேர்ந்தவர் பஞ்ச சமஸ்காரங்களைச் (திருமுத்திரை பதித்தல்) செய்து ரகசியத் திரயம் எனப்படும் 1.திருமந்திரம் 2.திவ்வியமந்திரம் 3.சரம ஸ்லோகம் ஆகிய உயர்ந்த (நாராயண) தத்துவங்களை அவர்கள் வாழ்ந்த இருப்பிடங்களுக்குச் சென்று போதித்தார்.

''திருமந்திரம்'' என்பது நலம்தரும் சொல்லான 'ஓம் நமோ நாராயணாய' என்பதைக் குறிக்கும்.

'திவ்விய மந்திரம்' என்பது ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே; ஸ்ரீமதே நாராயணாய நம'' எனப்படும். இந்த திவ்விய மந்திரத்தை அன்றாடம் ஜபிக்க வேண்டும் என்று ஸ்ரீராமானுஜர் வலியுறுத்தியுள்ளார். வைணவர்கள் இறக்கும் தருவாயில் இருப்பவரைத் துளசி திர்த்தம் அருந்தச் செய்து அவரது காதுகளில் திவ்வியமந்திரம் சொல்வார்கள்.

பகவத் கீதையில் பதினெட்டாம் அத்யாயத்திலுள்ள அறுபத்தி ஆறாவது சுலோகம் கண்ண பெருமான் போதிக்கும் சிறந்த உண்மையாகும். ''ஸர்வதர்மாந்பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ' அஹம் த்வாஸர்வ ப்ரபேயோ மோட்சயிஷ்யாமி மாசுச''. என்பதைச் சரம சுலோகம் என்பர். இதன் பொருள் ''எல்லாத் தர்மங்களையும் விட்டு என் ஒருவனையே சரண் அடை; எல்லாப் பாவங்களிலிருந்தும் உன்னை விடுவிப்பேன்; வருந்தாதே'' என்பதாகும்.

இதைப்போன்ற பல முக்கியத்தத்வார்த்த விஷயங்களை அறிந்து கொண்ட பின்னர் இம்முதலாழ்வார்கள் மூவரும் சாந்த சொரூபிகளாய் மாறி திருமால் தொண்டே பெருந்தொண்டெனக் கருதி ஞானமும் பக்தியும் மிகக் கொண்டு வாழ்ந்தார்கள். இவர்கள் இறைவன் பேரில் கொண்ட மாறாத காதலை '' உண்ணுஞ்சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன்'' என்ற வரிகள் மூலம் உணர்த்தப்படுகின்றது. இவர்கள் உலக வாழ்க்கையை வெறுத்து உணவு உடை இருப்பிடம் ஆகிய மூன்றினையும் மறந்து இறைவனையே கதி என்ற மட்டில் நாள்தோறும் பல இடங்களுக்குச் சென்று ஒருவரை ஒருவர் இன்னாரென்று அறியாமல் தனித்தனியே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அரவணையில் பள்ளிகொண்ட (அரங்கன்) பரமபத நாயகனாகிய எம்பெருமானுக்கு இம்மூன்று பக்திமான்களையும் ஒரு சேரப் பார்க்க வேண்டுமென்ற அவா எழுந்தது. ஒரு நாள் சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு பெருமழையும் பெருங்காற்றும் உண்டாயிற்று. எம்பெருமானின் சிந்தனையோடே பல இடங்களில் திரிந்து வந்து மூவரும் இப்பெருமழையில் சிக்கி ஒதுங்க இடம் தேடினர்.

பொய்கையாழ்வார் திருக்கோவிலுரை அடைந்து மிருகண்டு தவமுனிவர் திருமாளிகையில் சென்று முற்றத்தில் பள்ளி கொண்டார். அதே நேரத்தில் பூதத்தாழ்வாரும் அங்கு வந்து சேர்ந்தார். உடனே பொய்கையாழ்வார் எழுந்து வைணவ மரியாதைகளுடன் வரவேற்றார். வந்தனமும் வழிபாடுகளும் ஒருவருக்கொருவர் செய்துகொண்ட பின்னர் பொய்கையாழ்வார் ''இவ்விடம் ஒருவர் படுக்கலாம். இருவர் உட்காரலாம்'' என்று அவர்கள் ஒதுங்கியிருந்த இடத்தின் அளவை எடுத்துக் கூறினார். பிறகு இருவரும் உட்கார்ந்திருந்தனர். அதன் பிறகு பேயாழ்வாரும் அதே இடத்தை நாடி மழைக்கு ஒதுங்குவதற்கு வந்து சேர்ந்தார். தங்களை நாடி வந்தவர் வைணவப் பெருமகனார் என்பதை அறிந்தவுடன் அங்கு ஒதுங்கியிருந்த இரு ஆழ்வார்களும் தங்களுக்கு முன்பின் தெரியாத அப்பேயாழ்வாரின் தரிசனம் கிடைத்தது பெரும் பாக்கியமெனக் கருதி பெரிதும் உவந்து மதித்து மரியாதையுடன் வரவேற்றனர். பின்னர் அங்கு தங்கியிருந்த பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரை நோக்கி ''இவ்விடம் ஒருவர் படுக்கலாம். இருவர் இருக்கலாம். மூவர் நிற்கலாம்'' என்று கூறினர். அவ்விதமே மூன்று ஆழ்வார்களும் நின்று கொண்டே இறைவனது அரும் பெரும் குணங்களை உவகையுடன் உரையாடிக் கொண்டிருந்தனர்.

அந்நேரத்தில் சர்வ வல்லமை பொருந்திய ஸ்ரீமந் நாராயணன் அம்மூன்று ஆழ்வார்களுக்கும் அருள் செய்ய வேண்டி பெருத்த இருளையும் கனத்த மழையையும் அதிகமாக்கினார். இறைவனே பெரியவடிவத்தோடு மழைக்கு ஒதுங்கியதைப் போலவே அவர்களுடன் நின்று கொண்டு பெருத்த இட நெருக்கடியை ஏற்படுத்தினார்.

காரிருளில் கடுமையான மழை பெய்து கொண்டிருக்கும்போது தம்மை அறியாமலேயே ''இதுவரையில் இல்லாத இட நெருக்கடி இப்போது உண்டாவதற்குக் காரணமென்ன? வேறு எவரேனும் இங்கு புகுந்து கொண்டனரோ?'' என்று ஒவ்வொருவரும் தமக்குள் எண்ணினர். இவ்வாறுஇருட்டில் அவதியுறும் நேரத்தில் ஞானச்சுடர் விளக்கேற்றியும் வெய்யகதிரோனை விளக்காக ஏற்றியும் தங்களுடைய அகக் கண்களால் இருளை அகற்றி ஒளிபெற இறைவனை இறைஞ்சினார்கள். அடியவர்கள் படும் துயரைச் சிறிதும் சகியாத இறைவன் அவர்கள்பால் கொண்ட அன்பினால் சோதித்தான். ஆனால் அக்கணமே அவன் சோதனையை முடித்துக் கொண்டு அவ்விடத்திலேயே ஆழ்வார்களுக்குக் கருடாழ்வாரின் மீதே சர்வ அலங்காரங்களுடன் காட்சி அளித்தார்.

திருமாலின் திருமேனி தீண்டியதால் பெரும் இறையுணர்வு ஆழ்வார்களிடம் பிறந்தது. அத்துடன் இறைவனையே நேரில் கண்டதால் ஏற்பட்ட பெருமகிழ்ச்சியின் காரணமாக அவர்கள் இறைவனைப் போற்றி வணங்கினர். அவர்கள் இறைவன் பேரில் கொண்ட பக்தி உணர்ச்சி பெருகி வெள்ளமாகித் தெய்வத் தமிழில் பாக்களை இயற்றினார்கள். இறைவனின் தோற்றத்தைக் கண்டு அவன் அழகில் திளைத்து மனமுருகி பொய்கையாழ்வார் பாடிய முதல் பாடல் பின்வருமாறு:

''வையந் தகளியாய் வார்கடலே நெய்யாக
வெய்யகதிரோன் விளக்காகச் - செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன் மாலை
இடராழி நீங்கவே யென்று''

இவ்வாறு தொடங்கிப் பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியைப் பாடினார். அதனைத்

## திருக்குறள் தேசிய நூல்

திருக்குறள் எல்லாக் காலத்திற்கும், எல்லா நாட்டினருக்கும், எல்லாஇனத்தவர்க்கும் ஏற்ப அமைந்த நூலாகும். உலகளாவிய நோக்கில், பல்வேறு கொள்கைகளை ஆராய்ந்து நல்லனவற்றை வற்புறுத்தி அல்லனவற்றைக் களைந்திடக் கூறி திருவள்ளுவர் படைத்திருக்கும் திருக்குறளே நம் தேசிய நூலாவதற்கு முற்றிலும் தகுதியுடைய நூல்.

—அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையின் சார்பில் ஜனவரி 18, 19 நாட்களில் நடைபெற்ற கருத்தரங்கில் அதன் துணைவேந்தர் பேராசிரியர் ராம. சேதுநாராயணன் தெரிவித்த கருத்து.

தகவல் : டாக்டர் ஆறு. அழகப்பன்,
தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தொடர்ந்து பூதத்தாழ்வார் இறைவன் பேரில் உருகிக் கீழ்க்கண்ட பாடலைப் பாடினார்.

அன்பே தகளியாய் ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தையிடு திரியா-நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணர்க்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்''

எனத் தொடங்கி இரண்டாம் திருவந்தாதியும் பாடினார்.

மூன்றாவதாக பக்தியென்னும் வெள்ளத்தில் மூழ்கிய பேயாழ்வார் இறைவன் பேரில்

''திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமுங் கண்டேன்-செருக்கிவரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக் கண்டேன்
என்ஆழி வண்ணன்பால் இன்று''

எனத் தொடங்கி மூன்றாந்திருவந்தாதியையும் பாடினார். இறைவன் முதலாழ்வார்கள் பால் கொண்ட ஈடுபாட்டால் அவர்களுக்கு காட்சியளித்து உய்வித்துஆட்கொண்டார். முதலாழ்வார்கள் பாடிய இப்பிரபந்தங்கள் ''முதல் திருவந்தாதி'' என்றும் 'இரண்டாம் திருவந்தாதி' என்றும் 'மூன்றாம் திருவந்தாதி' என்றும் புகழ் பெற்றன. மூன்று நூற்றந்தாதிகளும் ஏற்றம் மிகுந்தவையாகும்.

முதலாழ்வார்கள் சாதிமத பேதமின்றி நாராயணன் ஒருவனே நமக்குற்ற துணை என்ற தத்துவத்தை உலகுக்கு எடுத்துக் காட்டினார்கள். இடைவிடாத பக்தியும் அன்புமே இறைவனை அடையும் மார்க்கம் என்ற நெறியில் நின்று நெடுங்காலம் திருப்பதிகள் தோறும் சென்று வழிபட்டனர். அவர்களின் மாறாத பக்தியாலும் யோக பலத்தாலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இம்மண்ணுலகில் ஆழ்வாங்கு வாழ்ந்து மண்ணுலகில் இறையுணர்வை வளர்த்தனர் என வரலாறு கூறுகிறது. முதலாழ்வார்கள் பெருமையை மணவாள மாமுனிகள் கீழ்க்கண்ட திருப்பாடல் மூலம் விளக்குகிறார்.

''மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்துதித்து
நல்தமிழால் நூல் செய்து நாட்டையுய்த்து-
பெற்றிமையோர்
என்று முதலாழ்வார்களென்னும் பேரிவர்க்கு
நின்றதுலகத்தே நிகழ்ந்து''.

***

அருட்பெருஞ்சோதி!
தனிப்பெருங்கருணை!

அருட்பெருஞ்சோதி!
அருட்பெருஞ்சோதி!


# வள்ளலார் வாழ்க்கைக் குறிப்புகள்

பொன். செல்வராஜ்

உதவி ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை, கடலூர்.


## வள்ளல் இராமலிங்க அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| 1. பெயர் | ... | இராமலிங்கம் |
| 2. தோற்றம் | ... | 5-10-1823-சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் 19-ம் நாள் வெள்ளிக்கிழமை சித்திரை விண்மீன். |
| 3. அருட்பெருஞ்சோதியாய் நிறைந்து மலர்ந்தது | | 30-1-1874 ஸ்ரீமுக ஆண்டு தைத் திங்கள் 19-ம் நாள் ஞாயிற்றுக் கிழமை பூச விண்மீன். |
| 4. பெற்றோர் | | இராமையனார், சின்னம்மையார். |
| 5. பிறந்த பேறு பெற்ற ஊர் | | மருதூர் (சிதம்பரத்திற்கு வடமேற்கில் பத்துக்கல் தொலைவில் உள்ளது) தென்னாற்காடு மாவட்டம். |
| 6. உடன் பிறந்தோர் | ... | தமையன்மார்-சபாபதி, பரசுராமன். தமக்கைமார்-சுந்தராம்பாள், உண்ணாமுலை. அடிகள் ஐந்தாம் மகனாகத் தோன்றியவர். |
| 7. இளமையும் கல்வியும் | ... | மிக இளமையிலேயே தந்தையை இழந்தார். தாயுடன் தாயின் ஊராகிய சென்னையை அடுத்த பொன்னேரியில் சிலகாலம் தங்கிய பின் நிரந்தரமாகச் சென்னைக்குச் சென்று தங்கினார். சென்னையில் இராமலிங்கம் வளர்ந்து சிறந்த இல்லம் இன்றும் உள்ளது.<br><br>மகாவித்துவான் காஞ்சி சபாபதி நாவலரிடம் இளமையில் முறையாகக் கல்வி பயின்றார்.<br><br>ஞானக் கல்வியை ஓதாமல் உணர்வால் உணர்ந்து உயர்ந்து சிறந்தார். |
| 8. அறிந்த மொழிகள் | ... | செந்தமிழ் வடமொழி (சமஸ்கிருதம்), ஆங்கிலம், தெலுங்கு (பற்பல மொழிகளில் பயிற்சியும் ஓரளவு உண்டு). |
| 9. ஞான குரு | ... | தனிப்பெரும் கருணையாகி அருட் பெருஞ்சோதியாகத் திகழும் இறைவரே இவர் குரு. |
| 10. உறைவால் சிறந்த ஊர்கள் | ... | சென்னை, சிதம்பரம், கருங்குழி, வடலூர், மேட்டுக்குப்பம். |
| 11. அருளிச் செயல்கள் : | ... | உரைநடை:<br>1. மனுமுறை கண்ட வாசகம்<br>2. சீவகாருண்ய ஒழுக்கம்<br>3. விண்ணப்பங்கள்—நான்கு<br>4. திருமுகங்கள் (கடிதங்கள்)<br>5. 'உலகெலாம்' சொல்விளக்கம்<br>6. தொண்டமண்டலமா? தொண்டை மண்டலமா?<br>7. தமிழ்-விளக்கம்<br>8. பொன்வண்ணத்தந்தாதி ஒரு பாடல் உரை.<br>9. அறிக்கைகள் இலக்கண விளக்கம் பிற குறிப்புகள்.<br>10. விண்ணப்பம் முதலியவை. |



சத்தியஞானசபை

| | | |
|---|---|---|
| | | பதிப்பித்த நூல்கள்: |
| | | 1. ஒழிவிலொடுக்கம்: |
| | | 2. தொண்டமண்டல சதகம் |
| | | 3. சின்மய தீபிகை |
| | | திருவருட்பாக்கள்: |
| | | திருவருட்பா-ஆறுதிருமுறைகள். தனிப்பாக்கள் |
| 12. | வாழ்வியல் பணிகள் ... | 1. சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்-1865 |
| | | 2. சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை-1867 |
| | | 3. சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை-1872 |
| 13. | அருட்பெருஞ்சோதியாய் மலர்ந்து நிறைந்த இடம் ... | சித்திவளாகம் (மேட்டுக்குப்பம்) |
| 14. | கொடி ... | மஞ்சள் வெள்ளை (மேற்பாதி மஞ்சள், கீழ்ப்பாதிவெள்ளை. அளவு நீளத்தில் மூன்றில் இரண்டு பாகம் அகலம்): |
| 15. | அன்பர்களால் இட்டழைக்கப் பட்ட சிறப்புப் பெயர்கள். | அடிகளார், வள்ளலார், திருவருட் பிரகாசர் முதலியன. |
| 16. | கொள்கைகள் | அ. கடவுள் கொள்கை |
| | | மனிதன் தெய்வநிலைக்குயர்ந்து தெய்வமாகலாம். 'கடவுள் நிலையறிந்து அம்மயமாதல்' என்ற மெய்ப்பொருள்படி தனியாக ஒருதெய்வம் எங்கும் இல்லை. |
| | | ஆ. சமுதாயக் கொள்கை |
| | | அருளியல் : சுத்த சன்மார்க்கச் சாதனத்திலிருந்து சாத்தியர் களாகி மரணமிலாப் பெருவாழ்வில் திளைத்தல். ''சுத்த சன் மார்க்க சுக நிலைப்பெற்று உத்தமராகி ஓங்குதல்''. |
| | | உலகியல் : ''ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமையுளராகி உலகியல் நடத்தல் வேண்டும்.'' |
| | | இ. அரசியல்கொள்கை. |
| | | கருணையிலா ஆட்சிக் கடுகி ஒழிந்து அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்தல் |
| 17. | பின்பற்றப்பட வேண்டியவை: | சமரசம் சன்மார்க்கம், ஆன்மநேயம். |



வடலூரில் நடைபெற்ற வள்ளலார் விழாவில் வள்ளல் நா. மகாலிங்கனார், ஊரன் அடிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு தங்கவேலு ஐ.ஏ.எஸ்., துணை ஆணையர் திரு வி. வாசகப் பெருமாள், உதவி ஆணையர் பொன் செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வள்ளலார் அருள் உபதேச மொழிகள்

1. கடவுள் ஒருவரே அவர் அருட்பெருஞ்சோதி ஆண்டவரே என்றறிக.
2. எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணுக.
3. ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைக் கடைப்பிடித்திடுக.
4. ஏழைகளின் பசி தவிர்த்தலாகிய ஜீவகாருண்யமே பேரின்ப வீட்டின் திறவுகோல் என்றறிக.
5. எக்காரியத்திலும் பொது நோக்குடன் செயல்படுக.
6. அன்பர் திருவுளம் கோயிலாகக் கொண்டே அற்புதச் சிற்சபை ஓங்கும் அரசனாம் அருட் பெருஞ்சோதி ஆண்டவரை விடுத்து வன்பரிடைச் சென்று மயங்காதீர்.
7. கண்கட்டி ஆடும் பருவத்திலே ஒரு பெண்கட்டி ஆள நினைத்துப் புண்சட்டியாய் அலைந்து மண்கட்டிபோல் உதிராதீர்.
8. திருவருள் தேனுண்டு மகிழ்ந்து கலந்து உறவாடும் நாள் எந்தநாளோ என எண்ணி எண்ணி ஏங்குக.
9. கள்ளருந்துதல், சூதாடுதல், காமக்கடை தொறும் மயங்குதல் பொய்யே விள்ளுதல் (பேசுதல்) புரிவதை அறவே ஒழிந்திடுக.
10. சாதி சமய சழக்கை விட்டால் அருள்ஜோதியைக் காணலாம்.
11. ஊழை அகற்றும் உளவறிக. காம ஐம்புலன்கள் விரட்டுக.
12. பொய் விரிப்பார்க்குப் பொருள் விரித்து, நற்பொருட் பயனாம் மெய்விரிப்பார்க்கு இரு கைவிரிப்பவரிடம் மேவாதீர்.
13. இன்றிருந்தவர் நாளை நின்றிலரால், நன்று செய்வதை இன்று செய்திடுக.
14. வஞ்சநெஞ்சர்தம் சேர்க்கையைத் துறந்து வள்ளல் திருமலரடி ஏத்துக.
15. ஒழுக்கம் இல்லாதவன் ஓர் இடத்தே அடிமைக்கு ஆளாவன்.
16. தாழ்வினைத் தரும் காமமே உனைக் கீழ்த்தள்ளிவிடும் காண்க.

# அதிசய நெய் நந்தீஸ்வரர்



வேந்தன்பட்டி
**இராமநாதன்**

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம்தாலுகா வேந்தன்பட்டி நகரச்சிவன் கோவிலில் 'அதிசய நெய் நந்தீஸ்வரர்' இருக்கிறார்.

நந்தி எம்பெருமானுக்கு நெய் அபிஷேகம் தான் மிக விசேடமாக நடைபெற்று வருகிறது. தினந்தோறும் இளநீர், பன்னீர், பால், நல்ல பசுநெய் இவைகளில்தான், எங்கள் நெய் நந்தீஸ்வரர் குளிப்பது வழக்கம்

நந்தீஸ்வரர் சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்னர் புதுக்கோட்டையைச் சேர்ந்த விராலிமலைக்குப் பக்கத்தில் உள்ள, கொடும்பாளூரிலிருந்து மிகப்பெரிய சகடையில் பல எருதுகள் பூட்டி வேந்தன்பட்டி நகரத்தார்களால், புதுக்கோட்டை மன்னரிடம் அனுமதி பெற்று வேந்தன்பட்டிக்கு கொண்டுவரப்பெற்றார். சோழ மன்னர் காலத்தில் உருவாக்கப்பெற்றதாகும் இந்நந்தீஸ்வரர் சிலை. இக்கொடும்பாளூர் வரலாற்றுத் தொல்பொருளியல் சிறப்புமிக்க இடம். இவ்வூர் சிலப்பதிகாரத்திலும் குறிக்கப்பட்டுள்ளது. கொடும்பை, இருக்குவேளூர் என்பன இதன் பழைய பெயர்கள். கோருட்டிக்கொடி (தலை நகரம்) கொடும்பாளூர் என்று பெரியபுராணம் கூறுகிறது. கொடும்பாளூரில் 108 சிவன் கோயில்கள் இருந்தன. அவற்றுள் மிகச் சிலவே இன்றுள்ளன. ஆக, இந்நந்தீஸ்வரர் காலத்தால் மிக முற்பட்டவர். வரலாற்றுச் சிறப்பு மிக்கவர்.

கொடும்பாளூரிலிருந்து கொண்டு வந்த நந்தி எம்பெருமானை சிலமணி நேரங்களில் ஒரு முரடன் காலால் உதைத்துவிட்டான். உதைத்தவுடன் அவன் மனதில் திடீரென்று பயஉணர்வு ஏற்பட்டு தன்னைக் காளைவிரட்டுவதாகச் சொல்லிக் கொண்டு, பயந்து திடீரென்று அலறிக்கொண்டு அங்குமிங்குமாக ஓடினான். அதுசமயம் கூட்டமாக நின்று கொண்டிருந்தவர்களில் ஒருவரின் பேரில் அருள் வந்து, அவனை நிறுத்தி அடைக்கலம்தந்து அவனை மன்னித்து அவன் தலையில் விபூதிபோட்டு டலரின் வேண்டுதலுக்கிணங்கி, இனிமேல் நெய் அபிஷேகம்தான் செய்ய வேண்டுமென்று சொல்ல எல்லோரும் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு விபூதி பெற்றுக் கொண்டார்களாம். அதன் பின்னர் உடனே நந்தி எம்பெருமானுக்கு நல்ல பசுநெய் கொண்டுவந்து அபிஷேகம் செய்யப்பெற்று பக்கத்தில் உள்ள குளத்து நீரில் விட்டு வைத்தார்களாம். அதன் பின்னர் கோவில் திருப்பணி முடித்து நந்தி எம்பெருமானை கோவிலில் ஸ்தாபிதம் செய்திருக்கிறார்கள். அதிலிருந்து தொடர்ந்து நந்தி எம்பெருமானுக்கு பசுநெய்தான் அபிஷேகம் செய்யப்பெற்று வருகிறது.

நந்தீஸ்வரரின் சிலை கருங்கல்லில் செதுக்கப்பட்டிருந்தாலும், நல்ல பசுநெய்யிலேயே குளிப்பதனால், ஒயிட்மார்பிள்ஸ்டோனில் செய்யப்பட்டது போல, தூய வெண்மையாகவும், மிக்க அழகுடனும் எப்பொழுதும் காட்சிதருகிறார். இரவிலும் விளக்கின் ஒளி இல்லாமலே காணமுடியும்.

மேலும் அருளும், அழகும், அமைதியும், ராஜ கம்பீரமும் பொருந்தியவர். வேண்டுமுன்னர் பக்தர்களின் மனமறிந்து வேண்டுவோர்க்கு வேண்டுவன அருளுபவர். தஞ்சை ஜில்லாவில் வைத்தீஸ்வரன் கோவிலுக்குச் சமீபமாக உள்ள திருப்புன்கூர் கோவிலில், பக்தன் நந்தனின் வேண்டுதலுக்கிணங்க ''நந்தீஸ்வரர்'' சற்று விலகி இருப்பதுபோல, எங்கள் ஊர் வேந்தன்பட்டி நகரச்சிவன் கோவிலில் வீற்றிருந்து அருள்புரியும் ''நெய்நந்தீஸ்வரர்'' இடப்பாகமாகத் (தெற்குத் திசையில்) சற்று ஒருக்களித்து சிவனுக்கு எதிரில் மிகச் சமீபமாக அமர்ந்திருக்கிறார். சக்தியில் மிகப் பெரியவர். முக்தி தருபவர்.

கைமேல் பலன்தரும் நெய் நந்தீஸ்வரருக்கு அபிஷேகம் செய்யப்பட்ட நெய்யை மிகுந்த பின்னர் பக்கத்தில் நந்தவனத்தில் உள்ள நெய்கிணற்றில் கொண்டுபோய் சேர்ப்பது வழக்கம். அப்படிச் சேர்க்கப்பட்ட நெய்யிலோ, அபிஷேகம் செய்யப்பட்டிருக்கும் நெய்யிலோ, ஈ, எறும்பு, கொசு போன்றவைகள் எப்பொழுதும் அணுகுவதில்லை என்பது மிகுந்த ஆச்சரியமும் உண்மையுமாகும். இன்றைய விஞ்ஞான உலகில் நறுமணம் மிகவும் உள்ள பசுநெய்யில், ஈ எறும்பு அணுகாமலிருக்க வேறு இரசாயனங்களை சேர்க்காமல் விஞ்ஞானிகளாலும் செய்யமுடியாது. எங்கள் அதிசய நெய் நந்தீஸ்வரரின் சக்தியும் பெருமையும் பழமையானது. இப்பகுதியில் வாழும் மக்களுக்கும், வெகு தொலைவிலிருந்து வந்து கண்டு தரிசித்துச் செல்பவர்கட்கும் எங்கள் நெய்நந்தீஸ்வரரின் பெருமையும் சக்தியும் நன்கு தெரியும். ஆகையால் மக்கள் அனைவரும் அதிசய நெய்நந்தீஸ்வரரைத் தரிசித்து அருள்பெறுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் இங்கு வந்து கண்டு நேரில் தரிசிக்க இயலாதவர்களும் இருந்த இடத்திலிருந்தே வேண்டிக் கொண்டாலும் நற்பலன்களை அடைய முடியும். இது முற்றிலும் உண்மை.

— — — — — —

# கந்தவேள் கருணை



திருமுருக
கிருபானந்த வாரியார்

## —( 3 )—

மன்மதன் தன் அரண்மனைக்குச் சென்றான். நன்றாக அலங்காரம் செய்துகொண்டான். கரும்பும், அரும்பும், சுரும்புமே அவனது ஆயுதங்கள். தாழம் பூ அவனுக்கு உடைவாள், (புஷ்பங்களில் தேன் உண்டு. புஷ்பம் கட்டுகிறவர்களின் கைகளில் அந்தத் தேன் பட்டுப் நைப்பு ஏற்படும். அந்த நைப்புத் தன்மையை மாற்றச் சாம்பலைத் தொட்டுக் கொள்வார்கள். தாழம் பூவில் ஒருவித மான மகரந்தச் சாம்பல் இருக்கிறது. அதனால் தான் புஷ்ப பாணங்களை விடுகிற மன்மதன் அதனை உடைவாளாக வைத்திருக்கிறான்.) இந்த ஆயுதங்கள் அகிலாண்டம் முழுவதையும் அடிமைப் படுத்தக் கூடியவை. அவனுக்குக் குடை சந்திரன்; சமுத்திரம் நல்ல முழவு; தேர் தேன்றல், அந்தப் பரிவாரங்களுடன் புறப்பட்டான் மன்மதன்.

அவன் தேவர்களை மயக்கும்போது புஷ்ப வில்லில் புஷ்ப பாணம் விடுப்பான், மனிதர்களை மயக்கும்போது கரும்பு வில்லில் புஷ்ப பாணம் விடுப்பான். அசுரர்களிடம் போகும்போது இரும்பு வில்லில் புஷ்ப பாணம் விடுப்பான்.

மன்மதன் புறப்படுவதை ரதி பார்த்தாள். 'சுவாமி! எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டாள்.

''சிவ, சிவ! நீயும் அபசகுணத்தை உண்டாக்கினாயா? என் அண்ணாவின் பிடிவாதமான உத்தர வின்படி சிவபெருமான் மீது போருக்குப் புறப்படுகிறேன் '' என்று மன்மதன் கூறினான்.

ரதி துணுக்குற்றாள். 'சுவாமி! சிவபெருமான் மீது போருக்குப் போய் திரும்பி வந்தவர் உண்டா? தாங்கள் தனித்துப் போக வேண்டாம். நானும் உங்களுடன் வருகிறேன்'' என்றுபுறப்பட்டாள் ரதி.

ரதியும் மன்மதனும் தங்கள் பரிவாரங்களுடன் கயிலை மலைக்குச் சென்றனர். கயிலையைக் கண்டதும் மன்மதன் தேரை விட்டிறங்கினான்; தன்னுடன் வந்த பரிவாரங்களை அங்கேயே விட்டு விட்டு ரதிதேவியை அழைத்துக் கொண்டு வில்லும் அம்புமாய் கயிலை மலைமீது ஏறினான்; கரும்பு வில்லை வளைத்து மலர்க்கணை பூட்டி அங்கிருந்த பறவைகள் மீதும் விலங்குகள் மீதும் விடுத்துக்காம இச்சை உண்டாக்க நினைத்தான். கீழக் கோபுர வாயிலில் இருந்த நந்தியெம்பெருமான் மன்மதனின் எண்ணத்தை அறிந்து ஆத்திரங்கொண்டார்; உம்..ம் என்று சினந்து ஊங்காரம் செய்தார். அந்த ஒலியைக் கேட்ட மன்மதனுடைய பாணங்கள், பறவைகள் மீதும் விலங்குகள் மீதும் செல்லாமல் ஆகாயத்திலேயே நின்றுவிட்டன. நந்தி தேவன் முன் சென்று அவரது காலில் மன்மதன் விழுந்தான்.

காவல்காரரிடமே காதல் தெய்வத்தின் காரியம் இயலவில்லை என்றால் யஜமானைப் பற்றிக் கேட்க வேண்டுமா? மதனன் நடுங்கியவாறு ''நந்தியெம்பெருமானே! தேவர்களின் துயர் துடைக்கும் பொருட்டு பிரம்மதேவர் உத்தரவுப்படி சிவபெருமானிடம் வந்திருக்கிறேன்'' என்றான்.

அப்படியானால் 'மேலக் கோபுர வாயில் வழியாகப் போ' என்றார் நந்தி.

மன்மதன் நந்தி தேவரை வணங்கி விடை பெற்றுக் கொண்டு மேலக் கோபுர வாயிலின் உள்ளே, தூங்குகின்ற புலியை எழுப்பும் மானைப் போல் சிவபெருமானிடம் சென்றான். நீறு பூத்த நெருப்புப் போல் இருக்கும் இறைவன் தென் திசையைநோக்கி மோனத்திருக்கோலத்தில் அமர்ந் திருந்ததைக் கண்ட மன்மதன் நடுங்கினான். அவன் உடல் எல்லாம் வியர்த்தது. கையில் வைத்திருந்த வில் அம்புகளுடன் களைத்துக் கீழே விழுந்தான். ரதிதேவி மன்மதனைத் தன் கரத்தால் தாங்கி ஆறுதல் கூறித் தேற்றினாள். மன்மதன் களைப்பு நீங்கி எழுந்தான். 'ஈசனை கண்டவுடனேயே உயிரை இழந்தவன் போலாகி விட்டேனே! இனி எம்பெருமானை எதிர்த்துப் பாணம் விடுத்தால் உய்ய முடியுமா? இன்னும் சிறிது நேரத்தில் சிவ பெருமானின் நெற்றிக் கண் பார்வையால் வெந்து அழியப் போகிறேன். உரலில் தலையைக்கொடுத்து விட்டு உலக்கைக்குப் பயந்தால் முடியுமா?விதியை யாராலும் வெல்ல முடியாது. இறைவன் திருவுள்ளம் எப்படியோ, அப்படியே நடக்கட்டும்' என்று மன்மதன் தனது வில்லை வளைத்து நாணேற்றிக் கண்ணுதற் கடவுளை அணுகினான்.

அங்கே, இந்திரன் மனோவதி நகரத்துக்குச் சென்றான். அங்கிருந்த பிரம்ம தேவரை வணங்கி 'எம்பெருமான் மீது மன்மதனைத் தனித்து ஏவி விட்டீர்களே. அவன் போர்த்திறத்தைப் பார்க்க



நாமும் செல்லுவோம்'' என்று வேண்டிக் கொண்டான். பிரம்மன், இந்திரன் முதலிய தேவர்கள் மன்மதன் மலர்க்கணை விடுப்பதைக் காணப் புறப்பட்டுக் கயிலை வந்தடைந்தனர். கயிலை மலையின் ஒரு புறத்தே அவர்கள் சிவபெருமானைத் துதித்துக் கொண்டிருந்தார்கள்.

சிவபெருமான் மீது குறி வைத்து ஐந்து மலர்க் கணைகளை விடுத்தான் மன்மதன். அந்தக் கணைகள் எம்பெருமான் மீது பட்டதும், நெற்றிக் கண்ணைச் சிறிதே திறந்து பார்த்தார்.

அவ்வளவுதான்! வெல்ல வந்தவன் வெந்து போனான். பெருமானின் பார்வையிலிருந்து எழுந்த தீ மன்மதனின் உடலை எரித்தது. அதனால் உண்டாகிய புகை கயிலை மலை முழுவதையும் சூழ்ந்தது. மன்மதன் சாம்பலாகி விட்டான்.

விட்டவெம் பகழி ஐந்தும் வியத்தகு
விமலன் மீது
பட்டலுஞ் சிறிதே வேளைப் பார்த்தனன்
பார்த்த லோடும்
கட்டழல் பொதிந்த நெற்றிக் கண்ணது கடிதே
காமற்
சுட்டது கயிலை முற்றுஞ் சூழ்புகை பரவிற்
றன்றே.''

மதனன் ஒருவன் எரிந்து தோன்றிய புகை கயிலை முழுவதையும் சூழ முடியுமா என்று வியக்க வேண்டாம். சின்னஞ்சிறு அணுவை ஆயுதத்தால் சிதைக்கும் போது எழும் புகைக் கொண்டல்கள் எவ்வளவு பரிமாணம் வியாபிக்கின்றன? இந்த அணு ஆயுதத்தைக் காட்டிலும் கொடிய ஆசை ஆயுதமல்லவா அனங்கன்?

எல்லாருக்கும் ஆசை உண்டாக்குவது மன்மதனுடைய வேலை. சிவபெருமான், தாம் ஆசையை அறவே களைந்ததோடு மட்டுமன்றி, ஆசையை அனைத்துலகுக்கும் உண்டாக்கும் அதிதேவதையையே அழித்து விட்டார்.

காமன் எரிந்தபோது எழுந்த புகை, அரிஅயனாதி தேவர்கள் பாற்கடலைக் கடைந்த சமயம் ஆலகால விஷம் தோன்றியதைப் போலிருந்ததாம். அது கண்ட நந்திதேவன் 'மன்மதன் எரிந்து விட்டான்' என்று தம்மைச் சூழ்ந்திருந்த கணங்களிடம் கூறினார். ''சிவபெருமானின் நெற்றிக் கண் மன்மதனைச் சுட்டது என்று நினைக்காதீர்கள். கருணா மூர்த்தியான அவரை மலர்க் கணையால் மயக்கிவிடலாம் என்றெண்ணிய மறச் செயலே சுட்டுவிட்டது. ரதி தேதி பதியை இழந்த சோகத்தால் வருத்தமுற்று எம்பெருமானிடம் வேண்டிக் கொள்வாள். கண்ணுதற் கடவுள் மன்மதனை மீண்டும் எழுப்பித் தருவார். இந்தக் காட்சியை நீங்கள் பாருங்கள்'' என்று முக்காலமும் உணர்ந்த நந்திதேவர் சுரகணங்களுக்குக் கூறினார்.

முப்புரத்தை எரித்த முக்கட் பெருமான்தமது அடியார் மூவரையும் எரிக்காது விட்டது போலத் தென்றல் தேருடைய மன்மதனை எரித்த எம்பெருமான் ரதி தேவியை எரிக்கவில்லை. சிவபெருமான் மன்மதனை எரித்துவிட்டு முன்போலவே மோன நிலையில் வீற்றிருந்தார். சிவபெருமானின் நெற்றிக் கண் மன்மதனை எரித்தது நிக்கிரக சக்தியைக் காட்டுகிறது. இதே நெற்றிக்கண் முருகரைத் தோற்றுவித்து அரக்கரை அழித்து நல்லோரை வாழ்விக்கிறது. இது அநுக்கிரக சக்தியைக் காட்டும். மாரனை அழித்த அதே கண்கள் தாம் குமாரனைத் தந்தருளின.

ரதிதேவி துயர்க்கடலில் ஆழ்ந்தாள். அவள் கண்களிலிருந்து வழிந்த நீர் ஆறுபோல் ஓடிற்று. அவள் உடல் வியர்த்தது. ஆவி ஒடுங்கியது. 'பிராணபதி! என்று கதறிக் கீழே விழுந்தாள்.

செம்பதுமை திருக்குமரா! தமியேனுக்(கு)
ஆருயிரே! திருமால் மைந்தா !
சம்பரனுக் கொருபகைவா! கன்னல்வரிச்
சிலைபிடித்த தடக்கை வீரா!
அம்பவளக் குன்றனைய சிவன்விழியால்
வெந்துடலம் அழிவுற்றாயே!
உம்பர்கள்தம் விழியெல்லாம் உறங்கிற்றோ?
அயனாரும் உவப்புற் றாரோ?

''திருமகள் பெற்ற செல்வப் புதல்வரே! என் ஆருயிரே! 'மன்மதனும் ரதியும்போல்' என்று உலகத்தார் ஒற்றுமைக்கு நம்மைச் சொல்வார் களே! அப்படியிருந்தும் சிவபெருமான் மீது போருக்குச் செல்ல வேண்டாம் என்று நான் சொன்னபோது கேட்கவில்லையே! கரும்பை வில் லாகக் கொண்டு இரும்பையும் உருக்கிய தாங்கள் கடைசியில் கருணாமூர்த்தியான கயிலை நாதரின் நெற்றிக்கண் பட்டு இறந்துவிட்டீர்களே!'' என்று கதறினாள் ரதி.

மறைந்தவர்களின் உடலையேனும் பார்த்துக் துக்கத்தை முழுவதும் வெளிப்படுத்தும் பாக்கியம் கூட ரதிக்கு இல்லை; அவன் பஸ்பமாகிவிட்டான். இதை எண்ணி, 'வெந்துடலம் அழிவுற்றாயே!' என்று கதறினாள்.

'சுவாமி! சிவபெருமான் மீது போருக்குப் போ போ'' என்று உங்களைப் பிடித்துத் தள்ளி னார்களே! அந்தத்தேவர்கள் உம்மைஈசன் எரித்த போது எப்படிப் பார்த்துக் கொண்டிருந்தார்களோ! 'தொலைந்தான் தம்பி; பங்காளி பங்கு கேட்க மாட்டான்' என்று உங்கள் அண்ணா பிரம்ம தேவருக்கு உவப்பாக இருந்திருக்கும்.

'' சுவாமி! நீங்கள் அலங்காரம் செய்து கொண்டு நிற்கும்பொழுது உங்களைக் கண்டு விம்மி தம் அடைவேனே! 'மன்மதனைப் போன்ற அழகு' என்று அழகுக்கு உங்களை யல்லவா இந்த உலகம் சொல்லுகிறது? உங்களுடைய மலைபோன்ற தோள்களைத் தழுவிக் கொண்டிருந்த நான், அன்பு பொழியும் உங்கள் திருமுகத்தை இனி எந்தக் காலத்தில் பார்ப்பேன்? போன ஜன்மத்தில் ஒற்றுமையாக வாழ்ந்த கணவன் மனைவியரி டையே கலகம் செய்து அவர்களைப் பிரித்து விட்டேன் போலும்! அவ்வினைதான் இப்போது வந்து வருத்துகிறதோ? எதுவும் தெரியாமல் வருந்துகிறேனே சுவாமி'' என்று பலவாறாகப் புலம்பினாள் ரதி.

மன்மதன் இருந்த இடம் தெரியாமல்மறைந்து விட்டான்! சிவபெருமான் முன்போலவே மோனத் திருக்கோலத்தில் எழுந்தருளிவிட்டார். தேவர் களின் உத்தேசமெல்லாம் வியர்த்தமாகிவிட்டது; உள்ளம் கலங்கினார்கள். கலக்கத்துக்குப் பின் தெளிவு பிறந்தது; விவேகமுண்டாயிற்று, பெரு மானின் மோனநிலையை எதிர்ப்பு உபாயத்தினால் மாற்ற முடியாது; பிரார்த்தனை ஒன்றாலேயே மாற்ற முடியும்' என்று அவர்கள் தெரிந்து கொண் டார்கள்.

—தொடரும்

# விநாயகர் அருள்

ம. சூரியராஜ் பி.ஏ, பி.எல்.,

இந்து சமயத்தின் ஆதாரமாம் ஓங்காரத்தத்துவம் அந்த அருவ, அருவுருவ உருவம்தான் 'கணபதி'. அனைத்திற்கும் ஆதாரமான முழுமுதல் மூர்த்தி என்பதால் அவனன்றி ஓரணுவும் அசையாது. அவன் அருள் பெற்றோர் எல்லாம் பெற்றோரா வர்.

விநாயகரை சிந்திக்க இடம் பொருள் ஏவல் எதுவும் தேவை இல்லை. சிந்திக்கும்தோறும் சிறப்புப் பெறுவர். அதனால்தான் அவன் திருக்கோயில் அமைப்பதற்கும் யாரும் குறிப்பிட்ட இடத்தை மட்டும் தேர்ந்தெடுத்து அமைக்காமல் செல்லும் இடமெல்லாம் நினைந்து அமர்த்திஅருள் பெறுகின்றார்கள்.

''பிடித்து வைத்தால் பிள்ளையார்'' என்ற முதுமொழிக்கு ஏற்ப அவர் நாம் விரும்பும் வகையி லெல்லாம் விரும்பும் இடத்தில் எல்லாம் வந்தி ருந்து விக்கினம் போக்கி வல்வினை அகற்றி, செய்வினை திருத்தி வெற்றிக்கு வித்தகனாய், கருணையின் வடிவாய் ஆற்றலின் உறைவிடமாய், டாச இருள் அகற்றும் ஒளியாய் அல்லல்படு வோர்க்கு அடைக்கலப் பொருளாய், மடமைகள் மாற்றும் கலைப் பிளம்பாய், சக்தியின் பிறப்பிட மாய், திருமகளின் திரு அருளாய் நின்று வேண்டி யது வேண்டத் தருபவராய், நம்மைக் காத்திடும் தெய்வமாய் காட்சி தந்தருளுகிறார்.

எந்த இடத்திலும் எந்த சமயத்திலும் எல்லா நலனும் அளிக்க காத்திருந்தாலும் அதை நாம் பெற நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டு மல்லவா.

பத்து லிட்டர் பால் வாங்க வேண்டுமானால் நாம் அதற்கான கொள்ளளவு உள்ள பாத்திரத்தை தேர்ந்தெடுக்கிறோம். அதில் ஓட்டை எதுவும் இருந்தால் பால் ஒழுகிவிடும். பாத்திரம் களிம்பு ஏறியோ சுத்தமில்லாமலோ இருந்தால் அப்போதும் பால் கெட்டுவிடும். இதை எல்லாம் கவனிக் கின்றோம். இதேபோல் விநாயகர் அருளை பெற நாம் எப்படிப்பட்ட பாத்திரமாக இருக்க வேண் டும்.

அருளைப் பெறத்தக்க மனப்பக்குவம்பெற்று மனத்துக்கண் மாசிலான்ஆக, புற அக அழுக்கு நீங்கி தூய சிந்தனைகட்கு ஆளாகி நல் மனச் சாட்சியை வளர்த்து அதன் வழி நடக்க வேண்டு மல்லவா! அதற்கான முயற்சியில் இறங்கி, ஏற் கனவே உள்ள நம் மனமான பாத்திரம் பழுது பட்டிருந்தாலும் அழுக்கும் களிம்பும் ஏறியிருந் தாலும் அவைகளைக் களைந்து அருளைப் பெற்றுக் கொள்ள தயாராக வேண்டும். இல்லையெனில் அவன் அருளை கொடுத்தாலும் பெற முடியாமல் போகும். இந்நிலையில் அவன் அருள் இல்லையே என்று நொந்து கொள்வது எங்ஙனம் ?

சிந்தித்து நம்மை அதற்குப் பக்குவப்படுத்தி நல்வழி நடந்து நேர்மையைக் கடைப்பிடித்து தன் நலத்திற்காக பிறர் துயர் அடையும் செயலைச் செய்யாமல், தினமும் முழுமனதுடன் ஒரு சில மணித்துளிகளாவது விநாயகர்பால் நம் சிந்த னையை நாம் செலுத்துவோமாக.

# பாரதப் போரில் பார்த்தசாரதி



டாக்டர் த. அமிர்தலிங்கம்

கர்ணனும் சல்லியனும் வாள் எடுத்து வீசிப் போர்தொடங்க முற்படுகையில் இதைக் கண்ணுறும் துரியோதனன் விழுந்தடித்து ஓடிவந்து தடுக்கிறான். 'கர்ணா! இதுவா எனக்கு நீ செய்யும் சகாயம்? தேவேந்திரனுக்கு அமராபதியை மீட்டுத் தந்த முருகக் கடவுளைப்போல நீயும் எனக்கு என் நாட்டைக் காத்துத் தரப்போகிறாய் என்று நான் நம்பி இருக்கிறேனே! ஆனால் நீயோ அர்ச்சுனனோடு போர் தொடங்குவதற்குப் பதிலாகநமக்குச் சகாயனான சல்லியனோடு போர்புரிய போகின்றாயா? உள்ளத்தில் ஒன்றும் உதட்டில்மற்றொன்றுமாகச் சல்லியனுக்கு வஞ்சகம் பேசத் தெரியாது, உன்னுடைய ஆவேசத்தைத் தூண்டினால் இன்னும் நீ சிறப்பாகப் போர்புரிந்து எனக்கு வெற்றியைப் பெற்றுத் தருவாய் என்பதற்காக அவன் ஏதேனும் பேசியிருக்கக்கூடும். அதனை நீ தவறாகப்பொருள் புரிந்துகொண்டு அவன் மேல் பாயலாமா? நம் அணியில் நமக்கு அரணாக நின்று போர் செய்திருக்க வேண்டிய விதுரரும் பரசுராமரும் தீர்த்த யாத்திரை போய் விட்டார்கள். வீடுமரும் துரோணரும் இறுதி யாத்திரை போய் விட்டார்கள். இனி நான் நம்பியிருப்பது உன் ஒருவனை மட்டுமே! நீயுமா என்னை இப்படி மோசம் புரிய எண்ணுகிறாய், கோபம் ஆறு; தேர்மேல் ஏறு; பாண்டவரைச் சீறு; வெற்றியை சேரு'' என்று துரியோதனன் சமாதானப்படுத்திக் கர்ணனைத் தேர் மேல் ஏற்றுகிறான்.

''மித்திரரென்று நோக்கா தென்னுடன் விளைந்த நண்பான்
மத்திர நிருபன் மைந்தன் வந்தெனக்கு உதவியானான்
குத்திரனல்லன் செம்மைக் கொள்கையன்மறையின் மிக்க
வத்திர சாபம் வல்லான் இவனொடு ஆரமர் செய்கிற்பார்''
''என்மொழி மறாமல் இன்று உன் இரத சாரதியுமானான்
நன்மொழியன்றி வேறு நவை மொழி நவிறல் தேற்றான்
தன்மொழி உறுதி யாவும் தருமெனக் கைக்கொளாமற்
புன்மொழியாடினும்மிற் புலப்பது புன்மையன்றோ''

(பதினேழாம் போர்ச் சருக்கம் 50,51)

இத்தகைய துரியோதனனின் நயமான மொழிகள் சல்லியனின் மனப்புண்ணையும் ஆற்றி விடவே அவன் மீண்டும் கர்ணனின் தேரில் ஏறி அவனுக்குச் சாரத்தியம் செய்கிறான். இதற்குப் பிறகே பதினேழாம் நாள் போரும் தொடங்குகின்றது.

கர்ணனுடைய எதிர்பார்ப்பினுக்கேற்பவே சல்லியனும் பார்த்தசாரதிக்கு ஒப்பாகக் கர்ணனுடைய தேரினைச் செலுத்துகிறான். சூறாவளியைப் போல் சுழன்று சுழன்று கர்ணனின் தேரைச் சல்லியன் செலுத்த கர்ணனும் தன்னுடைய வில்லாண்மையைக் கண்டு தேவர்களும் வியந்து பாராட்டுமாறு மிகக் கொடிய போரைச் செய்கிறான். மேருமலைக்கு ஒப்பான தன் வில்லில் கர்ணன் ஒரே நேரத்தில் நூறு நூறு பாணங்கள் ஏவுகின்றான். பாண்டவர் தளபதியான திட்டதுய்மனையும் அவனுடன் திரண்டு வந்திருக்கும் துணைப்படைகளையும் கதிகலங்க வைக்கின்றான் கர்ணன். திட்டதுய்மனின் தேர்க் குதிரைகளையும், தேர்ப்பாகனையும் அழிக்கின்ற கர்ணன், இடையீடின்றிப் பலநூறு பாணங்களைப் பெய்து அவன் ஏறியிருக்கும் தேரையும் கூட சிதைத்தழித்து விடுகிறான்.

உடைந்த தேரிலிருந்து விழுந்து உருளும் திட்டதுய்மன் வேறொரு தேரில் பாய்ந்து ஏறுகிறான். ஆனால் கர்ணனுடன் மீண்டும் அவன் போரிடத் துணிவு கொள்ளாமல் அந்தத் தேரை திருப்பி ஓட்டுமாறு தேர்ப்பாகனிடம் கூறிப் புறங்கொடுத்து ஓடிவிடுகிறான். இதைக் காணும்தருமர் தன்னுடைய தேரைக் கர்ணனை நோக்கிச் செலுத்தச் செய்து தானே கர்ணனை எதிர்த்துப் போரிடுகிறார். தருமருக்கு பாஞ்சாலர் மற்றும் கேகயர் துணையாக வருகின்றனர். கர்ணனுக்குக்கிருதவன்மன், கிருபன், சகுனி, அசுவத்தாமா முதலியோர் துணையாக வருகின்றனர். கர்ணன் தருமரின் இருதோள்களில் எட்டு அம்புகளையும் மார்பில்ஏழம்புகளையும் செலுத்த ஆண்சிங்கம் போன்று அஞ்சிடாமல் நின்று போர் புரியும் தருமரும் ஒப்பற்ற இரண்டு அம்புகளை மட்டுமே செலுத்தி ஓர் அம்பினால் கர்ணனுடைய தோளினைப் பிளப்பதுடன் மற்றொரு அம்பினால் கர்ணனின் வில்லையும் அறுத்து விடுகிறார். தேவர்களும் தருமரின் போரைப் பார்த்து ''ஆஹா! தருமரின் வீர

மல்லவா வீரம்'' என்று புகழ்ந்துரைக்கிறார்கள். தருமர் தம் மாமனான சல்லியனையும் விட்டு வைக்கவில்லை. அவனுடைய மார்பிலும் போய் ஆழமாகத் தைக்குமாறு ஓர் அம்பினைச் செலுத்துகிறார் தருமர். சல்லியன் தன் தேரைத் தருமருக்கு அஞ்சித் திருப்பி ஓட்ட கர்ணனுக்குத் துணையாக வந்த கலிங்கதேசத்தார், மகததேசத்தார், குகுர தேசத்தார், ஒட்டிய தேசத்தார் முதலான பல தேசத்து மன்னர்களையும் அவர்தம் படைவீரர்களையும் வீரசுவர்க்கத்திற்குத் தருமர் அனுப்பி வைக்கிறார். வெற்றிச் சங்கினைத் தம் பவள வாயில் வைத்தும் தருமர் முழங்கிட அண்டகோளம் வெடிக்கிறது. அட்டதிக்குகளும் செவிடுபடுகின்றன. மேலுள்ள தேவலோகமும் கீழுள்ள நாகலோகமும் நடுங்க, உலகம் அழியும் கற்பாந்த ஊழி வந்துற்றதோ என்று எல்லோரும் அஞ்சி நடுங்கும்படியாக ஏழுகடல்களும்கூட பொங்குகின்றன.

''விசயனை வெல்வேன்'' என்று எப்பொழுதும் வீரம் பேசும் கர்ணன், தருமரின் சங்கநாதத்தைக் கேட்டுத் தருமரையும் கூட வெல்லமுடியாத தன் மேல் தானே ஆத்திரம் கொண்டு மீண்டும் விரைந்து வந்து தருமருடன் போர் புரிகிறான். கர்ணன் இரண்டு கணைகளை வீசி தருமரின் தேர் குதிரைகளை அழிக்க, தருமரும் இருகணைகளை ஏவி கர்ணனின் தேர்க்குதிரைகளை அழிக்கிறார். கர்ணன், மேலும் இரு கணைகளால் தருமரின் கொடியை அறுத்து வீழ்த்த, தருமரும் அவ்வாறே கர்ணனின் தேர்க்கொடியை அறுத்து வீழ்த்துகிறார். கர்ணன், தருமரின் தேர்ப்பாகனைக் கொல்ல தருமரும், கர்ணனின் தேர்ப்பாகனை மாய்க்கிறார். அதுகாணும் அசுவத்தாமா போன்றோர் கர்ணனுக்கொப்பான தருமரின் வில்லாற்றலைப் போற்றி வியக்கின்றனர். இவ்வாறு மாற்றாரும் பாராட்டப் போர்புரிகிற தருமரின் தேரினைக் கர்ணன் பல அம்புகளை ஏவிச்சிதைத்து அழித்துவிடவே, தருமர் சிதைந்த தன் தேரிலிருந்து தாவி மற்றொரு தேரில் ஏறுகிறார். தேர்ப்பாகனிடம் அவர் தேரைத்திருப்பி ஓட்டுமாறுகூற சாரதியும் அவ்வாறே செய்கிறான். அப்பொழுது கர்ணனும்கூட தருமரின் வீரத்தையும் அருங்குணங்களையும் பாராட்டி 'அறிவாற்றல் மிக்கு, ஆன்றோர்கள் போற்றும் புகழ்மிக்கு, சத்திய குணங்கள் மிக்கு, உலகெல்லாம் ஒருங்காளக் கூடிய அதிகாரம் பெற இருக்கிற தருமரா எனக்குப் புறங்கொடுத்துப் போவது? போகாதீர் நில்லும்! என் கணைகளுக்குப் பதில் சொல்லும், என்னை வெல்லும்'' என்று கூறத் தருமரும் அது கேட்டு கர்ணனுக்கு முன் தன் தேரைக் கொண்டு வரச் செய்து மீண்டும் அவனுடன் போர் புரிகிறார்.

அப்பொழுது தருமருக்கு உதவியாக உடுக்கை இழந்தவனுக்கு உதவும் கைபோல் வீமனும்விரைந்து வந்து சேர்கிறான். இது கண்டு சல்லியனும் ''கர்ணா! இனி வீமனிடத்தில் செல்லாதுன் வீரம்'' என்று கூற கர்ணனும் ''வீமனே யாகட்டும், அர்ச்சுனனே ஆகட்டும். என் ஒரு பாணத்துக்கு ஆற்றாமல் அவர்கள் அழிவது திண்ணம். நீ தேரைப் பேசாமல் ஓட்டு'' என்று கூறி வீமனோடு போரிடுகிறான். கர்ணனின் வாய் வீரம் சிதையும் வகையில் ஒரே அம்பினால் கர்ணனின் வில்லை வீமன் உடைத்துவிட வேறொரு வில்லை வேகமாக எடுத்துக் கொள்ளும் கர்ணன், அதில் பன்னிரண்டு அம்புகளைச் செலுத்துகிறான். அப்பன்னிரண்டு அம்புகளையும் தன் மேனி மேல் பாயாமல் வீமன் தடுத்துத் தன் ஒரு கையினாலேயே அவற்றை பிடித்துப் பொடியாக்கிவிடுகிறான். பிறகுகொடிய ஒரு பாணத்தை மட்டுமே கர்ணனின் மார்பில் செலுத்தி அவனை மூர்ச்சையாக்குகிறான்.

''சல்லியா! இன்னொரு பாணம் நான் செலுத்தினால் கர்ணனின் இன்னுயிர் இப்பொழுதே விண்ணுக்குப் பறந்துவிடும். என் தம்பி அர்ச்சுனன் சபதம் பொய்த்துவிடக் கூடாதென்றே கர்ணனுக்கு உயிரை வழங்கிச் செல்கிறேன். அவனுடைய மயக்கம் தெளிந்த பிறகு இதை அவனிடத்தில் கூறு'' என்று கூறி வீமனும் தன் தேரைச் செலுத்தி அப்பால் செல்கிறான்.

பாரதப்போரில் பாண்டவர்களுக்குத் துணையாக நம் தமிழ் மன்னர்களும் கலந்து கொண்டுவீரப் போர் புரிந்து வருவதை நாம் அவ்வப்போது பார்த்து வருகிறோம். சித்திரவாகனப் பாண்டியன் அசுவத்தாமாவுடன் மிக உக்கிரமாக இன்றைய தினம் போர் புரிகிறான். சித்திரவாகனப் பாண்டியன் அசுவத்தாமாவுடன் போர் புரிந்து அவனுடைய தேர்ப்பாகனையும் தேர்க்குதிரைகளையும் அழித்து, அவனுடைய வில்லையும்கூட சிதைத்தழித்துவிடுகிறான். சித்திரவாகனப் பாண்டியனைப் போல வீரமாக வேறு யாரும் இன்றைய தினம் போர் செய்யவில்லை என்பதாகக்கூறி தம்நாட்டுப் பற்றைப் புலப்படுத்துகிறார் வில்லிப்புத்தூரார்.

''சென்றெதிர் ஊன்றி வெவ்வேற் சேயனான்
தேரின் மேலும்
வன்திறல் வலவன் மேலும் பரிமாவின் மேலும்
துன்றிய கணைகள் ஏவி தொடுசிலை துணித்து
வீழ்த்தான்
இன்றவன் செய்த வீரம் அரசரில் யார்செய்தாரோ?''

(பதினேழாம் போர்ச் சருக்கம் 108)

தமிழ் மொழியானது தம்மைக் கற்பார் நெஞ்சில் பாய்ந்து ஆழமாகப் பதியக் கூடிய மிகச்சிறந்த மொழி. அத்தகைய முத்தமிழைப் போல சித்திர வாகனப் பாண்டியன் ஏவிடும் அம்புகளும் கூட அசுவத்தாமாவின் மார்பிலே பாய்ந்து ஆழமாகப் பதிகின்றன என்று கூறுவதன் மூலம், தம்முடைய தமிழ்ப்பற்றையும்கூட இங்கே வில்லிப்புத்தூரார் காட்டியிருப்பதைப் படித்துநாம் மகிழமுடிகின்றது.

''அந்தணன் ஏவை எல்லாம் அவனிபன்
அவ்வவ்வம்பால்
முந்துற விலக்கித் தங்கள் மூவகைத் தமிழும்போல
சிந்தையிற் குளிக்குமாறு சிலிமுகம் மூன்றுவிட்டான்
தந்தையை முதுகுகண்டோன் தனையனுக்கு
இளைக்குமோ தான்''

(பதினேழாம் போர்ச்சருக்கம் 110)

பிட்டுக்கு மண்சுமக்கும் கூலியாளாகச் சிவபெருமான் வந்தபோது, பாண்டியன் பிரம்பினால் சிவபெருமானையே அடித்தார். அப்படி சிவபெருமானையே அடித்த பாண்டியன் மரபில் வந்த இந்தச் சித்திரவாகனன் சிவகுமாரனாகிய அசுவத்தாமாவை விட்டுவிடுவானா? என்கிற பொருளில் ''தந்தையை முதுகு கண்டோன் தனயனுக்கு இளைக்குமோ தான்'' என்று கவி நயம்பட பாடிருப்பதையும் கண்டுமகிழ்கிறோம். சித்திரவாகனப் பாண்டியன் இவ்வாறு வீரப்போர் ஆற்றிக் கொண்டிருக்கும்போது அசுவத்தாமா வெகுண்டு தன் கொடிய வில்லை வளைத்து அம்பு மழையைப் பொழிந்து பாண்டியனின் செம்பொன் தேரைச் சிதைத்து அழித்துவிடுகிறான். தேர் சிதைவுபட பாண்டியன் மாற்று தேர் ஒன்றும் கிடைக்காமல் போகவே, அருகிலிருந்த ஒரு யானை மேல் தாவி ஏறி யானையிலிருந்தபடியே அசுவத்



தாமா மேல் தானும் அம்புகளைப்பொழிகின்றான். பாண்டியனின் தேரை அழித்ததைப் போலவே கொடிய கணைகள் பலவற்றை யானையின் மேலும் எய்து, யானையையும்கூட அசுவத்தாமா கொன்றுவிட பாண்டியன் தரைக்குத் தாவிக் குதிக்கின்றான். தரைக்குத் தாவிய பாண்டியன்தன்னை சுதாரித்துக் கொள்ளும் முன்பாகவே அசுவத்தாமா கணைகள் பலவற்றை ஏவ, பாண்டியனும் வீர மரணத்தைத் தழுவி விடுகிறான்.

சித்திரவாகனப் பாண்டியன் இவ்வாறு வீர மரணம் தழுவ, பாண்டவர்க்காகச் சத்தியப்போர் புரியும் தன் அறஉணர்வோடும், பாண்டியனை வென்ற அசுவத்தாமாவை வென்று பழிவாங்க வேண்டும் என்கிற இன உணர்வோடும் அங்கே விரைந்து வந்து சேருகிறான் நம் சோழமன்னன். ''உன் தந்தை துரோணரைக் கொன்ற திட்டதுய்மனை வெல்வதற்கு உனக்கு ஆற்றல் இல்லை. பாண்டியனை வென்றுவிட்டதாக ஆர்ப்பரிக்கிறாயா அசுவத்தாமா? யானை மேல் நின்றவனை தேரின் மேல் நின்று கொல்வதுவா வீரம்? அது வீரமல்ல, கோழைத்தனம்'' என்று இகழ்ந்து கூறி அசுவத்தாமனிடம் வீரப்போர் புரிகிறான் சோழன். அசுவத்தாமா, சோழமன்னன் இருவரும் தத்தம் வில்லை வளைத்துக் கணைகளைப் பொழியவே ஆகாயமே தெரியவில்லை. அவர்கள் விடும் அம்புகளே எங்கும் தெரிகின்றன. சோழர் குலத்தில் தோன்றிய சிபி என்ற மன்னன் புறாவிற்காகத் தன் சதையை அரிந்து வழங்கியபோது அவர் மேனி இரத்தத்தால் சிவந்ததைப் போலவே அசுவத்தாமா ஏவும் கணைகளாலும் சோழனின் மேனி எங்கும் காயமுண்டாகி இரத்தம் பீறிடுகிறது. அப்பொழுதும் அஞ்சிப் பின்வாங்கிடாமல் சோழ மன்னன் ஒருவலிய வேலினை எடுத்து அசுவத்தாமாமேல் வீசுகிறான். அவ்வேலும் குறி தவறிடாமல் போய் அசுவத்தாமாவின் மார்பில் பாய, அவனும் சுருண்டு மயங்கித் தேரில் வீழ்கிறான். அசுவத்தாமாவிற்குத் துணையாக வந்த துரியோதனின் தம்பிகளின் புதல்வர்களாகிய சுவாது, சுவாகு, கர்ணனின் புதல்வனாகிய சங்கன் மற்றும் பலரும் சோழனின் கணைக்குப் பலியாகி மடிகிறார்கள். சகுனி தன்னுடைய தலை தப்பித்தால்போதும் என்று அஞ்சி ஓடி ஒளிந்து கொள்கிறான்.

சோழனின் வீரத்தைப் பாராட்டும் வகையிலும், சோழர்களுக்குரிய 'சென்னி' எனும் பட்டப்பெயர் எப்படி வந்திருக்க இயலும் என்று தெளிவுபடுத்தும் வகையிலும் வில்லிப்புத்தூரார் ஓர் அழகிய பாடலை வடித்திருக்கிறார்.

''முன்னிய சிலைமறை முனிவன் மைந்தனும்
தன்னிக ரிலாவிறல் சகுனி யாதியாய்த்
துன்னிய நிருபரும் தொலமர்க்கு நீ
சென்னிஎன் றவன் புகழ் செப்பி மீளவே''

(பதினேழாம் போர்ச்சருக்கம்134)

அசுவத்தாமாவும், சகுனி முதலான மற்ற மன்னர்களும் வீரப்போருக்கு நீயே தலையானவன்- தொல்லமர்க்கு நீ சென்னி'' என்று கூறி சோழனுக்கு அஞ்சிப்புறம் கொடுத்து ஓடிவிடுகிறார்கள்.

சோழனுடன் பொருது அசுவத்தாமா முதலானோர் புறமுதுகிடும் இவ்வேளைதான் வீர வீமனுக்கொரு பொன்வேளையாகவும் அமைகிறது. அவனிடம் துச்சாதனனும் அவன் தம்பிகள்ஒன்பது பேரும்வந்து வசமாக அகப்பட்டுக் கொள்கின்றனர். வீமன் துச்சாதனனைக் கண்டவுடனே களிபேருவகை அடைகின்றான்.

''இன்றோ உன்றன் சென்னி துணித்து இழி
செம்புனலிற் குளித்திடுநாள்
இன்றோ அழலினுள் உற்பவித்தாள் இருள் ஆரகம்
முடித்திடுநாள்
இன்றோ தாகம் கெட நாவுக்கிசைந்த தண்ணீர்
பருகிடுநாள்
இன்றோ உரைத்த வஞ்சினங்கள் எல்லாம்
பயன்பெற்றிடு நாளே''

(பதினேழாம் போர்ச் சருக்கம் 138)

என்று கூறி வீமன் மகிழ்கின்றான்.

துச்சாதனனே அன்றைக்குத் துரோபதையின் கூந்தலைப் பற்றித் தரதரவென இழுத்து வந்த மாபாவி; அரசவையில் எல்லோரும் காணப் பாஞ்சாலியின் துகிலை உரிந்த மாபாதகன். அவனை வீடுமர் முதலான சான்றோர்களும் கேட்க வேசி என்று வைத குணக்கேடன். அன்றைக்கு அன்னை துரோபதை சிந்திய கண்ணீர்தான் இன்றைக்குக் குருசேத்திரப் போர்க்களத்தில் கௌரவர்கள் சிந்தக்கூடிய செந்நீர். துச்சாதனன் பலரும் காண அரசவையில் பாஞ்சாலியின் துகிலைஉரிந்து அவமானப்படுத்தியபோது அன்னை ஆறாகக் கண்ணீரை ஓடவிட்டாள். கோவிந்தா கோவிந்தாஎன்று வேறொரு சொல்லைக் கூறாமல் துச்சாதனன் பிடித்திழுத்த சேலையைத் தன் கைகளால் பற்றித் தடுத்தவாறு அன்னை அரற்றி அழுதாள்.கோவிந்தன் அருளால் பாஞ்சாலி உடுத்திருந்த ஓர் ஆடை, ஓர் ஆயிரம் கோடி ஆடைகளாகப் பெருகிமானத்தைக் காப்பாற்றியபோது பாஞ்சாலியின் பத்தினித் தன்மையைப் பாரே வியந்து போற்றியது.ஆனால் அப்பொழுதும் துரியோதனன் தன் சித்தம் தெளிந்திடாமல் 'துச்சாதனா! அவளைப் பற்றி இழுத்து வந்து என் தொடைமேல் அமர்த்து'' என்று ஆணவத்தோடுகட்டளையிட்டான். அதற்குப்பிறகுதான் பாஞ்சாலிக்குப் பொங்கியது ஆத்திரம். ''எந்தத் தொடையில் என்னைத் துரியோதனன் அமர்த்தச் சொன்னானோ அந்தத் தொடையில் இரத்தம் பீறிட, கழுகுகளும் கொத்த அவன் சாகட்டும்'' என்று சாபமிட்டாள். 'என் தலைமுடியை பிடித்திழுத்தும், ஆடையைத் தொட்டு அவிழ்த்தும் அடாதன செய்த துரியோதனன் துச்சாதனன் மாண்டுபட, பெருகிடும் அவர்கள் குருதியினைப் பூசி என் கூந்தலை நான் முடிப்பேன். அதுவரை துச்சாதனனால் அவிழ்க்கப்பட்ட என் கூந்தலை முடியேன்'' என்றும் அன்னை பாஞ்சாலி வீரசபதம் புரிந்தாள். அப்பொழுதுதான் வீமனும் ''கௌரவர் நூறு பேரையும் கொல்வேன். துச்சாதனன் இரத்தத்தில் குளித்த பிறகுதான் நான் என் கைகளினால் நீரையே அருந்துவேன். அதுநாள்வரை என் கைகளினால் நீரை அருந்த மாட்டேன். கதாயுதத்தினால் நீரை மோதி அதனால் சிதறும் நீர்த்துளிகளையே பருகிடுவேன்'' என்று வீரசபதம் புரிந்தான்.

''வண்டாரும் குழல் பிடித்துத் துகிலுரிந்தோன்
உடற்குருதி
உண்டாகம் குளிர்வதன்முன் இக்கரத்தாற்
புனலுண்ணேன்ஒருகால்என்கைத்
தண்டால் வெம்புனல்எற்றி மீதெழுந்து
விழுந்திவலை தண்ணீராகக்
கொண்டாவி புரந்திடுவேன் இது விரதம்
எனக்கெனவும் கூறினானே''

(சூது போர்ச் சருக்கம் 257)

இவ்வாறு சொன்ன தன் விரதப்படியே வீமன் கடந்த 13 ஆண்டுக்காலமாகத் தன் கைகளினால் நீரைப் பருகிடவில்லை.

இன்றைக்குத் துச்சாதனன் தப்பி ஓடிவிட முடியாதபடி, வசமாக வந்து அகப்பட்டுக்கொள்ள, தன் வஞ்சினம் வெல்ல நல்ல வேளைவந்து வாய்த்ததெனப் பூரிக்கின்றான் வீமன். வீமனுக்கு அதிகச் சிரமம் கொடுத்திடாமல் துச்சாதனனுடன் வந்திருக்கும் அவன் தம்பிகள் ஒன்பது பேரும் வீமன் விடும்கணை ஒவ்வொன்றினாலேயேதங்கள் தலைஅறுபட்டு தேரில்சாய்ந்து உயிர்விடுகிறார்கள். துச்சாதனன் உயிரைப் பறிப்பதற்குத்தான் வீமன் கொஞ்ச நேரம் போரிட வேண்டி இருக்கிறது.

முதலில் இருவரும் விற்போர் புரிகிறார்கள். துச்சாதனன் விடும்கணைகள் வீமன் அங்கமெல்லாம் துளைத்து நிற்க, அவையனைத்தும் பாறைமேல் விழும் மழைத்துளிகளைப் போல் வீணாகிப் போகும் வண்ணம், வீமன் அவற்றை உதறிஎறிந்து விடுகிறான். துச்சாதனன் மீண்டும் ஏழுகணைகளைத் தொடுக்க அவற்றில் நான்கு கணைகள், வீமனின் தேர்க்குதிரைகள் நான்கினையும், ஒரு கணை வீமன் தேர்க்கொடியையும்,ஒருகணைவீமன் ஏறி நிற்கும் தேரினையும், எஞ்சிய ஒரு கணை வீமன் பிடித்திருக்கும் கைவில்லினையும் சிதைத்து அழித்துவிடுகின்றன. வேறு ஒரு தேரில் பாய்ந்து ஏறும் வீமன் தானும் பத்து கணைகளைத்தொடுத்து மந்திரமலையால் பாற்கடலைக் கலக்குதலைப் போலத் துச்சாதனனைக் கலக்கித் துச்சாதனனின் அங்கமெல்லாம் அம்புகளால் துளைத்தெடுத்துஅவனுடைய கைவில்லையும் உடைத்துத் தேரையும் அழித்து விடுகிறான். இதற்குப்பின் துச்சாதனன் தரையில் குதித்து தன்னுடைய கதாயுதத்தைஏந்தி வேகமாகப் பாய்ந்து வந்து ஒரே அடியால்வீமனின் தேரை அடித்து நொறுக்கிவிட, வீமனும் தன் கதையுடன் தரைக்குப் பாய்கிறான். பிறகு இருவரும் வீராவேசமாகக் கதாயுத்தம் புரிகிறார்கள். வீமன் துச்சாதனன் இருவரும் கதையைத் தூக்கி ஆகாயத்தில் வீசி, ஒருகையாலேயே அதை மீண்டும் பிடித்துக் கொள்கிறார்கள். கண்டோர் அஞ்சி ஓடுமாறு கதையைச் சுழற்றுகிறார்கள். ஒருவரை ஒருவர் கோபாவேசத்துடன் அதட்டிக் கொள்கிறார்கள். அட்டதிக்கு யானைகள் அஞ்சவும், ஏழுலகிலும் உள்ளோர் காதுகள் செவிடுபடும்படியாவும், ஆதிசேடனும் அச்சத்தால் நெளியும்படியாகவும் வலசாரி, இடசாரியாகச் சுற்றிச் சுழன்று வந்து இருவரும் கதாயுத்தம் புரிகிறார்கள். இவர்கள் இருவரும் ஆற்றக்கூடிய போரைத் திரண்டு வந்து வேடிக்கை காண்கிற தேவர்களும் ஏனையோரும் மானிடர் செய்யும் போராக இதை உணரவில்லை. மந்திரமலையும் இமயமலையும் காலும் கையும் முளைத்து எழுந்து நின்று, கதையைப் பிடித்துப் போரிடுவதாகவே உணர்கிறார்கள். வீமன் துச்சாதனின் மார்பு, தோள்கள், கழுத்து என ஒவ்வொரு இடமாகப் பார்த்துப் பார்த்துஓங்கி ஓங்கி அடிக்கிறான்.

(தொடரும்)


# அந்நிய மண்ணில் வழக்காடி மீட்டோம்!

தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டம் பத்தூர் கிராமத்திலுள்ள அருள்மிகு விசுவநாதர் ஆலயம் பழுதடைந்து இடிந்துவிட்டது. இதற்குச் சொந்தமான உற்சவர் விக்கிரகங்கள் அனைத்தும் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன் கிராமத்தாரால் கருவறைக்குப் பின்புறமாய் பாதுகாக்கும் பொருட்டுப் புதைத்து வைக்கப்பட்டிருந்தன. இது விவரம் தெரிந்து ஒரு கிராமவாசி அருகில் ஒரு குடிசையைப் போட்டு, பிறகு யாருக்கும் தெரியாமல் இரவு நேரங்களில் பள்ளத்தைத் தோண்டி அதிலுள்ள விக்கிரகங்களைத் திருடியிருக்கிறார். அந்தச் சிலைகளில் நடராஜர் சிலையை மட்டும் எடுத்துவிற்றுவிட்டு மற்றவற்றை மீண்டும் புதைத்து வைத்திருக்கிறார். இந்த விலைமதிப்பற்ற நடராஜர் விக்கிரகம் பலரிடம் கள்ளத்தனமாக விற்கப்பட்டுக் கடைசியாகக் கனடாவில் உள்ள பம்பர் டெவலப்மெண்ட் கார்ப்பரேசனால் வாங்கப்பட்டு லண்டன் மியூசியத்தில் புதுப்பிக்கக் கொடுக்கப்பட்டிருந்தது.

இது லண்டன் ஸ்காட்லாந்து போலீசாரால் கைப்பற்றப்பட்டதில் நமது அரசுக்குத் தெரிந்து ஒரு சிவில் வழக்கு லண்டன் இராணி வழக்கு மன்றத்தில் அந்தத் திருக்கோயில், தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசும் இந்த நடராஜர் விக்கிரகத்தை நம் திருக்கோயிலுக்குத் திரும்பத்தருவதற்கு வழக்கு நடத்தப்பட்டது. இது சோழர் காலத்துச் சிறந்த விலைமதிக்க முடியாத ஒரு சிலையாகும். இதைப் பம்பர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் இரண்டரை லட்சம் டாலர் (33 லட்சம் ரூபாய்) கொடுத்து வாங்கிப் பின்பு இந்த வழக்கை நடத்துவதற்கும் சுமார் 50 லட்சம் வரை செலவு செய்துள்ளது. நமது அரசும் இந்த வழக்கை நடத்த சுமார் 30 லட்சம் ரூபாய் வரை செலவு செய்துள்ளது. (வழக்கு நமக்கு வெற்றி ஆனதால் நாம் செலவழித்த தொகை நமக்குத் திரும்பக் கிடைத்து விடும் என்பது குறிப்பிடத்தக்கது)

இந்த வழக்கு தொடர்பாக அறநிலைய நிர்வாகம், இந்து சமய அறநிலையச் சட்டம் மற்றும் திருக்கோயில்களின் நடைமுறை பழக்கங்கள் பற்றி வல்லுநர் சாட்சியம் இணை ஆணையர் திரு ம.சூரியராஜ்,பி.ஏ.பி.எல., அவர்களால் வழங்கப்பட்டது.

இந்தியச் சட்டம் தொடர்பான வல்லுநர் சாட்சியம் சட்டத்துறைச் செயலாளர் திரு.எஸ். வடிவேலு அவர்களாலும், தொல்பொருள் ஆய்வு மற்றும் சிலையின் தன்மை தொடர்பான வல்லுநர் சாட்சியம் திரு டாக்டர் இரா.நாகசாமி அவர்களாலும் வழங்கப்பட்டது. மேலும் தடய இயல் துறை இயக்குநர் டாக்டர் சந்திரசேகரன், தமிழ்நாடு குற்றப்பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு கே.கே.இராஜசேகரன் ஆகியோரும்



இவ்வழக்கில் சாட்சியம் வழங்கியதில் நடராஜர் சிலையைத் திரும்ப நம் திருக்கோயிலுக்குக் கொடுக்க லண்டன் இராணி நீதிமன்றத்தில் இவ்வழக்கை விசாரித்த மேதகு நீதிபதி திரு கென்னடி அவர்களால் தீர்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு ஒரு தனித்தன்மை வாய்ந்த வழக்காகும். நம் திருக்கோயில்களின் விக்கிரகங்கள் உலகத்தின் எந்தப் பாகத்திற்கு எடுத்துக் கொண்டுச் செல்லப்பட்டாலும் அதை நம் திருக்கோயில்கள் திரும்பப் பெற இவ்வழக்கு நமக்கு வழி செய்கிறது.


இந்த வழக்கு லண்டனில் நடந்தபோது அங்கே இந்திய ஹைகமிஷனராக இருந்த தற்போதைய தமிழக ஆளுநர் மேதகு டாக்டர் பி. சி. அலெக்ஸாண்டர் அவர்கள், இவ்வழக்கை வெற்றிகரமாக நடத்த பேருதவியாக இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

***

### தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் உள்ள திருக்கோயில்கள் பற்றிய விவரம்

| | |
|---|---|
| ஆண்டு வருவாய் ரூ. 200-க்கும் கீழ் வரக்கூடிய திருக்கோயில்கள் | 8368 |
| ஆண்டு வருவாய் ரூ. 10000க்கும் கீழ் வரக்கூடிய திருக்கோயில்கள் | 24736 |
| ஆண்டு வருவாய் ரூபாய் பத்தாயிரத்திலிருந்து ரூபாய் ஐம்பதினாயிரம் வரை வரக்கூடிய திருக்கோயில்கள் | 1469 |
| ஆண்டு வருவாய் ரூ. 50000லிருந்து ரூபாய் ஒரு லட்சம் வரை வரக்கூடிய திருக்கோயில்கள் | 166 |
| ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேல் வருவாய் வரக்கூடிய திருக்கோயில்கள் | 202 |
| ஆக மொத்தம் திருக்கோயில்கள் | 34941 |

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை—600 034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை—600 002






ஓதுவார் புத்தொளிப் பயிற்சி வகுப்புகளின் நிறைவு விழா தெய்வீகப் பேரவையில் 9-2-88 அன்று நடைபெற்றது. பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம், இசைப் பேறிஞர் திரு மீ.ப. சோமசுந்தரம், சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு கோ. செல்வம், அறநிலையத்துறையின் ஆணையாளர் திரு தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ்., அறநிலையத்துறையின் துணைச் செயலாளர் திரு எம்.கோபாலன்,எம் ஏ.,இணை ஆணையர்கள் திரு ம.சூரியராஜ்,பி.ஏ.பி.எல்., திரு இரா. தண்டபாணி பி.எஸ்சி., பி.எல்., ஆகியோர் இவ்விழாக்களில் பங்குகொண்டு உரையாற்றினர்.








ஓதுவார் புத்தொளிப் பயிற்சி வகுப்புகளை தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளரும், மேதகு ஆளுநரின் ஆலோசகரு மான திரு ஏ. பத்மநாபன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் பார்வையிட்டுத் தம் கருத்துரைகளை வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.



தமிழக அரசின் அறநிலையத்துறைச் செயலாளர் திரு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்., கலந்து கொண்டார்.



ஆணையர் திரு தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ்., சான்றிதழ் வழங்குகிறார்.



ஓதுவார் புத்தொளிப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்ட சான்றோர் பெருமக்களும், ஓதுவா மூர்த்திகளும்.